திருச்சிற்றம்பலம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 ] சித்தார்த்தி ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—79 [ இதழ்

## திருவாதிரைத் திருவிழா

24-12-79 — 2-1-80



திருவாதிரை நாளில் தில்லைப்பெருங் கூத்தன்
அருள்நடனம் போற்றி அல்லலறுத் தின்புறுவோம்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

மலர் 39 | 10-12-79 | இதழ் 1

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | நற்றமிழ் வளர்த்த நாவலர் ... | 1 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை... | 6 |
| 3 | கடிதப் பாடல்கள் ... | 11 |
| 4 | திரு ஆக்கூர்த் தலச் சிறப்புக்கள் ... | 12 |
| 5 | நக்கீரர்கண்ட நற்காட்சி ... | 17 |
| 6 | கீதக் கண்ணுடி .. | 20 |
| 7 | இந்து ஆலயங்களில் உள்ள ஐந்து பிரா காரங்களின் கதை ... | 4 |
| 8 | ஐயனுர் வழிபாடு ... | 27 |
| 9 | திருநள்ளாறும், சனிபகவானும் ... | 33 |
| 10 | எதிர்காலம் ... | 40 |
| 11 | செய்திகள் ... | 45 |
| 12 | அன்னை அருமாலை ... | 48 |
| 13 | 38 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம் ... | i |


உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

தீவினையால் இன்னமின்னம்
தேகமுறச் செய்வையோ
தீவினையற் றுன்மயமாய்ச்
செய்வையோ—தாவிதமாய்
இன்னபடி மேல்விளைவ
தென்றறியேன் ஈதறிந்த
அன்னையே சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 59

ஆசிரியர் :-
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
**சி. அருணைவடிவேல் முதலியார்.**

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ, 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ, 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

சிவமயம்

தருமையாதீனம்

# "ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

## சந்தாதாரர்களுக்கு

# ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி, சிவஞானத் தேன் நிறைந்து, கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "**ஞானசம்பந்தம்**" முப்பத்தெட்டு ஆண்டுகள் நிறைந்து முப்பத்தொன்பதாவது ஆண்டின் முதலிதழ் வெளி வருகிறது.

சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் "**ஞானசம்பந்தம்**" இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலை மிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் "ஞானசம்பந்தம்" பெற வாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. **ஆயுள் சந்தா** அறிவிப்புச்செய்தது முதல் இன்றுவரை எழுநூறு அன்பர்களுக்கு மேலாக ஆயுள் சந்தா செலுத்திப் பலர் ஆயுள் உறுப்பினராகி உள்ளனர்.

ஆயுள் சந்தா செலுத்தினுல் அவர்களது வாரிசுகளும் "ஞானசம்பந்தம்" பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ, கல்வி அறநிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினுல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தா தாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக்கொள்கிருேம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக்கொள்ளுங்கள்.

## சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா ( உள்நாடு ) | ... ரூ. | 9—00 |
| ஆண்டுச் சந்தா ( சிலோன் ) | ... ரூ. | 11—00 |
| ஆண்டுச் சந்தா (வெளிநாடு) | ... ரூ. | 17—00 |
| ஆயுள் சந்தா (உள்நாடு) | ... ரூ. | 100—00 |
| ஆயுள் சந்தா (வெளிநாடு) | ... ரூ. | 125—00 |

## விளம்பரம்

| | |
|---|---|
| பின் அட்டை வெளிப்பக்கம் 2-கலர் | 300—00 |
| பின் அட்டை உட்பக்கம் 1-கலர் | 200—00 |
| இதழின் உட்பக்கம் ,, | 100—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்.

ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609 001
தஞ்சை மாவட்டம்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 39 | சித்தார்த்தி - கார்த்திகை-10—12—79 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## "நற்றமிழ் வளர்த்த நாவலர்"

**புகழாரங்கள்:**

"அவருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் அப்பர் திருவாக்கிற்கு இலக்கியமாக அவரைக் கூறலாம்."

— டாக்டர். உ. வே. சாமிநாதஐயர்.

"தமிழ்மக்களின் நன்மையின் பொருட்டுத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ்செய்த பெரியார்."

— எஸ் வையாபுரிப் பிள்ளை.

"இவர் திருத்தி அச்சிட்ட நூல்களே, பிற்காலத்தில் தமிழ்நூல்களை அச்சிட வந்தோர்க்கு ஓர் வழிகாட்டியாக இருந்தன."

— டாக்டர். க. கணபதிப் பிள்ளை.

நிகண்டு போன்ற நூல்களைப் பதிப்பித்து வழங்கிய அருமைப்பாடு மற்றொரு புறம். முதல், இரண்டு சைவ வினாவிடை, நித்தியகருமவிதி, சிவாலயதரிசனவிதி, புட்பவிதி. சிதம்பரமான்மியம் கோயிற்புராண உரை, திருமுருகாற்றுப்படை உரை முதலியன வகுத்ததோடு. சிவ ஞானபோதச்சிற்றுரை, பதினொராம் திருமுறை, திருவாசகம் முதலியன பதிப்பித்த நிறைவான சமயப்பணிகள் இன்னொருவகை. மற்றும் அவர்களது பதிப்பில் வெளிவந்தனவும், கண்டனங்களும், சமூகம் மற்றும் அரசியல் தொடர்பான கட்டுரைகளும், சிலகீர்த்தனங்களும் அவர்களது தூயதமிழன்பிற்கு கட்டியங்கூறி முத்திரைகளாக நிற்கின்றன.

## உரைநடைக்கலைக் கோலங்கள் :

அவர்களது உரைநடைகளில் எளிமை துலங்கும். பற்பல சொற்களால் தொடர்கள் நீளமாகவே அமையும். எதுகை மோனைகளோடு அழகிய சிற்றூற்றில் நீர் குதித்தோடுவது போல் ஓர் இனிய சாயல் அழகூட்டும். கருத்துக்கள் இவற்றினிடையேயுப் அழுத்தமாக உலா வரும். 'தமிழ்புலமை' என்ற அவரது கட்டுரையிலிருந்து சிலவரிகள்:

> " தமிழ் கற்கப்புகும் சைவ - சமயிகள் முன்னர் பால பாடங்களைப் படித்துக்கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து. இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக. திருவள்ளுவர் குறள் நாலடியார் முதலிய நீதி நூல்களைப் பதப் பொருளுடனே கற்றறிந்து கொள்க. சமயதீட்சை பெற்றுக்கொண்டு சைவர்களுக்கு இன்றியமை யாச்சிறப்பினவாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழகிக்கொள்க "

காலத்தின் கோலமாக, ஆங்கிலமும் தமிழும் கலந்த உரைநடைகளைப் பல இடங்களில் நாவலர் வடித்துள்ளார். இது 'நல்ல சமயம்' என்ற அவரது கட்டுரையிலிருந்து சிலவரிகள்:

> " சனங்களே ! மேன்மை பொருந்திய புதுக்கவர்னர் உங்கள் துன்பங்களை நீக்குவார் என்று, அவர் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தீர்கள் ! புதுக்கவர்னர், பார்ச் சுத்துரையுடைய வசனத்தினாலும், கம்மிஷனர்களுடைய றிப்போட்டுப் புத்தகத்தினாலும் மயங்கிவிட்டார் !"

ஆறுமுகநாவலர் அவர்களின் கண்டனங்கள் கடுமையாக அமைந்தன. கேலியும் உணர்ச்சிக்கூறுகளும் கலந்த அவருடைய 'நல்லறிவுச் சுடர் கொளுத்துதல்' என்ற கட்டுரையில் ஓர் இடத்தில்,

> " நாவலரவர்களைப் பரீட்சிக்கும் பொருட்டு இராமாயணத்தில் ஓர் செய்யுள் வரைந்தீர் ! சபாசு ! சபாசு !! நீரா வித்துவான்களைப் பரீட்சித்துத் தரங்குறித்துப் பட்டங்

கொடுக்கப் புகுந்தீர்! கெட்டி!! தான் கிடப்பது குட்டிகைச் சுவர். கனுக்காண்பது மச்சு மாளிகையா? "

இங்ஙனம் தமிழ் உரைநடையின் தொடக்ககாலவரலாற்றில் நாவலர் அவர்களின் பல்வேறு முத்திரைகளைக் காண இயலும்.

## ஆதீனங்கள்பால் பக்தி:

ஆறுமுகநாவர் அவர்கள் கற்ருர்மாட்டும், கற்ருரைப் புரந்தருளும் சைவ ஆதீனங்களிடத்தும், ஆதீனங்களில் எழுந்தருளியிருந்து அருளரசு ஒச்சிய குருமூர்த்திகளிடத்தும் பேரீடுபாடும் பெருமதிப்பும் கொண்டு விளங்கியவர்கள். நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் என்பவர் தம்மை இழிவாக எழுதியது கண்டு வெகுண்டு, அவருக்கு எழுதிய மறுப்புக்கட்டுரை ஒன்றில்,

> " நாவலரவர்கள் சைவ - சமயத்தினது அபிவிருத்தியின் பொருட்டுக் கைம்மாறற்ற பெருங்கருணையினுலே சிதம்பரத்திலே தாபித்தருளிய சைவப்பிரகாச வித்தியாசாலையிலே திருவாவடுதுறையாதீனத்து உபயசற்குரு நாதசுவாமிகளும், தருமபுரவாதீனத்துப் பெரியசற்குருநாத சுவாமிகளும், சுத்தசைவ - சித்தாந்த வழியொழுகும் திருக்கூட்டத்தார் சேவிப்ப வீற்றிருந்தருளி அச்சாலைமாணுக்கர் கல்வியைப் பரீட்சித்து இனிது பாராட்டியருளினமையை அறியாதார் யாவர்? இத்துணைப் பெரும்பாக்கியம் பெற்றதானம் நாவலரவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையன்றி வேறியாது? "

எனக் குறித்துள்ளமை அவர்களது சைவாதீனப் பத்திமைக்குச் சான்று கூறிநிற்பன.

## உறுதிபூணுவோம்:

கி. பி. 19 ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் தோன்றி, பிற்பகுதியில் அமரரான நாவலரால் தமிழும் சைவமும் பெற்றநலன்களை எல்லாம் ஒருங்கு நினைவுகூர்ந்து, அவரது நினைவினைப் போற்றும் இந்நூற்ருண்டு நன்னுளில் நாமும் செந்தமிழ்க்கும் சிவநெறிக்கும் ஒல்லும் வகையாலெல்லாம் உயரிய தொண்டாற்ற உறுதிபூணுவோமாக.

மன்னுமீ ழத்தை அடைந்துதொண் டாற்றி
மாமறைக் காட்டினை மேவித்
தொன்னலத் துறைசை தருமையம் பதியிற்
ருேகைவிரி யுரைபல நவிற்றி
முன்னமே ழிசையாற் செழுந்தமிழ் வளர்த்த
முதல்வரைப் பயந்தசீ காழி
என்னுமா நகரில் இறைவன்தாள் தொழுதார்
இன்றமிழ் வளர்த்தநா வலனுர்.—விபுலானந்த அடிகள்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவில்

வழங்கியருளிய

# ஆசியுரை

30—11—79

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே."

— ஞானசம்பந்தர்.

**வானநூல் கலைக்குச் சான்று பஞ்சாங்கம் :**

வானில் உள்ள நட்சத்திரங்களின் அமைப்புக்களையும் நவக்கிரகங்களின் இயக்கங்களையும் உள்ளவாறு ஆராய்ந்து, உலகில் நிகழ இருக்கும் நன்மை தீமைகளைக்கணித்து வெளியிடப்பெறும் பஞ்சாங்கம் நம் நாட்டு மக்களின் வானநூலாராய்ச்சிக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது. கிரகணம், சனிப்பெயர்ச்சி போன்றவற்றைப் பலமாதங்கட்கு முன்பேயே சரியாக நாள், மணி, நிமிடம் வரை கணக்கிட்டு எழுதிவைக்கும் அரிய அறிவினைப் பாராட்டவேண்டும்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்ற ஒன்பதும் நவக்கிரகங்கள் எனப்படும். இவற்றில் முதல் ஏழும் தனித்தனி கிரகங்கள் என்றும், பின் இரண்டும் சாயா கிரகங்கள் (நிழல் கிரகங்கள்) என்றும் பெயர்பெறும்.

## ஆற்றல் உடையாரை அஃதிலார் சுற்றுவர் :

கிரகங்களில் மிகப் பெரியதும், ஜீவராசிகளை வாழவைக்கக்கூடிய ஆற்றல் பெற்றதும், சிறந்த ஒளியை உடையதும். மற்றக் கிரகங்களை ஈர்க்கக்கூடிய சக்தி பெற்றதும் ஆன கிரகம் சூரியனே ஆகும். எஞ்சிய எட்டுக் கிரகங்களும் சூரியனைச் சுற்றிவருவன. இவ்வுலகில் மனிதவர்க்கத்தில்கூட ஆற்றல் உடையவரையும், அணைவரையும் வாழவைக்கும் அருள் உள்ளம் கொண்டவரையும், மிகுந்த செல்வாக்குப் பெற்றவரையும் எஞ்சிய மக்கள் தேவை கருதிச் சுற்றிவருவது போல எல்லாக் கிரகங்களும் சூரியனைச் சுற்றிவருகின்றன.

எல்லாக் கிரகங்களும் சூரியனைச் சுற்றுகின்றன என்றாலும் உதாரணத்திற்கு ஒன்றைச் சிந்திப்போம். சூரியனைப் பூமி சுற்றிவருகிறது. சுற்றும்பொழுது முதலில் தன்னைச் சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றுகிறது. பூமி ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக்கொள்ள ஒரு நாளும், சூரியனைச் சுற்ற 365 நாட்களும் ஆகின்றன. ஒரு காரில் உள்ள சக்கரங்கள் தம்மைச் சுற்றிக்கொண்டே மற்ற இடங்களையும் சுற்றிவருவதுபோலவே, பூமியும் தன்னைச் சுற்றிக்கொண்டே சூரியனையும் சுற்றிவருகிறது. பூமி சூரியனைச்சுற்ற 365 நாட்கள் ஆகும் என்பதுகொண்டு சூரியன் எவ்வளது பெரியது என்பது புலப்படும். இதைப்போலவே சனியும் சூரியனைச் சுற்றிவருகிறது. சனி சூரியனைச் சுற்ற சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் ஆகின்றன. சூரியனுக்கு 12 வீடுகள் ( இராசி ) உண்டு என்றும், சனி ஒவ்வொரு வீட்டையும் கடப்பதற்கு $2\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகின்றன என்றும் நம் முன்னோர்கள் திருவருட்குறிப்பால் உணர்ந்து உணர்த்தியுள்ளார்கள்.

மக்களின் மூச்சுக்களில் பிங்கலையாகத் ( வலப்பக்கம் ) திகழ்பவன் சூரியன் என்றும், இடகலையாகத் (இடப்பக்கம்) திகழ்பவன் சந்திரன் என்றும் கூறுவர். சூரியனைத் தந்தையாகவும் ( பிதுர்காரகனையும் ) சந்திரனைத் தாயாகவும் ( மாதுர்காரகனையும் ) கூறுவர். தந்தையை இழந்தவர்கள் அமாவாசை விரதமும், தாயை இழந்தவர்கள் பருவ விரதமும் கடைப்பிடித்தலால் இது நன்கு விளங்கும். சூரியனைப் போலவே சந்திரனும் தன் அமுத கிரணங்களால் இவ்வுலகில் உள்ள உயிர்களை வாழவைக்கின்றான்.

## கிரகங்களும், கிழமைகளும் :

சூரியன் எல்லா உயிர்கட்கும் ஒளியும் வாழ்வும் அளித்துக் காத்துவருவதால், " உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு " என்று நக்கீரர் கூறி மகிழ்கிறார். ஒவ்வொரு நாட்களுக்கும்

அமைந்த பெயர்க்காரணம் இங்கே சிந்திக்கத்தக்கதாகும். கிழமை என்றால் உரிமை என்று பொருள், ஞாயிற்றுக்கிழமை ஞாயிறுக் குரியது என்றும், திங்கட்கிழமை திங்களுக்குரியது என்றும், செவ்வாய்க்கிழமை செவ்வாய்க்குரியது என்றும், புதன்கிழமை புதனுக்குரியது என்றும், வியாழக்கிழமை குருவுக்கு உரியது என்றும், வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்குரியது என்றும், சனிக்கிழமை சனிக் குரியது என்றும் கூறுவர். எஞ்சிய கிரகங்களாம் ராகுவும் கேதுவும் சாயாகிரகங்கள் ஆதலின் தனிப்பட்ட நாட்பெயரில்லை ஒவ்வொரு நாளிலும்வரும் இராகுகாலம் $1\frac{1}{2}$ மணிநேரமும் இராகுவுக்கு உரிய தாகும். இதேபோல் கேதுவுக்கும் ஒவ்வொரு நாளும் $1\frac{1}{2}$ மணிநேரம் உரியதாகும்.

## ஆளும் கிரகங்களும், அடியார்களும்:

சூரியன் முதலிய ஒன்பது கிரகங்களும் அதனதன் கடமையைச் சரிவரச் செய்துவருகின்றன. கிரகங்கள் யாவும் பரமேசுவரனைப் பூசித்துக் கிரக பதங்களைப் பெற்றுள்ளன; பரமேசுவரனின் ஆணை வழியே இயங்குகின்றன. கிரகங்கள் அதனதன் இயக்கத்தின்வழி மக்கட்கு நன்மையையும் தீமையையும் அளித்துவருகின்றன.

இந்தக் கிரகங்களின் வழிவரும் துன்பங்களிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் கிரகங்களையும் அவற்றினை இயக்கும் சிவபெரு மானையும் வழிபடவேண்டும்.

கிரகங்களின் தாக்குதல் தவசிகளையும் சிவனடியார்களையும் ஞானிகளையும் பாதிப்பதில்லை. மேலும் இறைவனை வழிபடும் அன்பர் களையும், நல்ல இறைபக்தியுணர்வுடைய பாடல்களைப்பாடி வருவோ ரையும் பாதிக்காது. காரணம் என்னவெனில் இவர்கள் கடவுளையே தியானித்துக் கொண்டிருப்பதால் பிறருக்குத் தீங்கு நினையாமல் வாழ்கின்றார்கள் ஆதலின் தீமைகள் அடைவதில்லை.

சிலநேரங்களில் வினைவழி துன்பங்கள்வந்து தாக்கினும் அது அவர்களைப் பாதிப்பதில்லை. அவ்வினையினால் அவர்களின் உடல் இடர் உற்றாலும் உள்ளம் இடர் உறுவதில்லை சூரியனைத் தலைவனாகக் கொண்டு இயங்கும் இந்தக் கிரகங்கள் பரமேசுவரனின் ஆணையில் கட்டுப்பட்டிருப்பதால் அவை சிவனடியார்கட்கு நல்லனவே செய்யும். இவற்றையெல்லாம் எண்ணியே ஞானசம்பந்தர், கோளறு திருப் பதிகத்தில்,

‘ வேயுறு தோளிபங்கன் ....................
என் உளமே புகுந்த அதனுல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறும். நல்லநல்ல, அவைநல்ல நல்ல,
அடியா ரவர்க்கு மிகவே.

என்று பாடியருளினர்.

நாளும் கோளும் நம்பன் அடியார்க்குத் துன்பங்களைச் செய்யாது என்பது மட்டுமல்ல; இன்பங்களையும் செய்யும் என்னும் குறிப்பினை ஞானசம்பந்தர், “ஆசறும்” என்று கூறியதனேடு “நல்ல நல்ல” என்றும் கூறுவதால் தெளிந்துகொள்ளலாம்.

எல்லாக்கிரகங்களினும்சூரியன்மிகப்பெரியவன், அந்தச்சூரியனும் ஆண்டவனின் ஆணைக்குக்கட்டுப்பட்டு இயங்குவதால் இறைவனைத் துதித்து வழிபடுவோர்க்கு, கோள்களால் ஒருநாளும் துன்பம் இல்லை என்பது உண்மை. இக்கருத்தை விளக்கும்வகையில் பலநிகழ்ச்சிகள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் வருவதனைக்காணலாம்.

## நளனுக்கு நலங்கொடுத்த நம்பன் :

உதாரணமாக நளன் சரித்திரத்தைச் சிந்திப்போம். சனிபகவான் சூரியனுக்கும் சாயாதேவிக்கும் மகனுகத் தோன்றியவர். கால் ஊனம் உடையவர் ஆதலின் மெதுவாகவேநடப்பார். இதனுல் ‘சனைஸ்சரன்’ என்று பெயர் பெற்ருர். இதுவே வழக்கில் சனீஸ்வரன் என்ருகி விட்டது. இவர் ஒருமுறை நிடதநாட்டைச் சீரோடும் சிறப்போடும் ஆண்டுவந்த நளனை ஆட்கொண்டார். நல்லாட்சி புரிந்துவந்த நளன் ஆசாரசீலனுய் வாழ்ந்துவந்தகாலத்தில் ஒருநாள் அவசரத்தில் கால்களைக் கழுவும்பொழுது காலின் பின்புறம் நனையாமல் இருக்க வந்துவிட்டான் இதுவே காரணமாக ஆசாரம் குறைந்த நிலையைத் துணைக்கொண்டு சனிபகவான் பிடித்துக்கொண்டார். அவனைத் துன்பங்கள் அடுக்கடுக்காய்த் தொடர்ந்தன. நாரதமுனிவரின் நல்லாசியால் தீர்த்தயாத்திரைமேற்கொண்ட நளனிடம் பாரத்துவாசமுனிவர், ‘இத்துன்பங்கள் நீங்கத் திருநள்ளாறு சென்று வழிபடு’ என்று கூறியருளினர். அவனும் திருநள்ளாற்றை அடைந்தான். இங்குள்ள பிரமதீர்த்தத்தில் நீராடித் திருநீறு தரித்து, ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே திருக்கோயிலை அடைந்தான். உள்ளே செல்ல அடி எடுத்து வைத்தபொழுது, சனிபகவான், இனியும் இவனைத் தொடர்ந்தால் சிவ அபராதியாவோம் என்று எண்ணி நளனைவிட்டுப் பிரிந்து கோபுரவாயிலின் வடபால் நின்ருர்; நிற்கிருர்.

இவ்வரலாற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்வதெல்லாம் எவ்வளவு தீமைகள் தொடர்ந்து நம்மை அடர்த்தாலும் நாம் எஞ்ஞான்றும், சிவசிந்தனையில் ஈடுபட்டும், திருநீறு தரித்தும், ஐந்தெழுத்தை உச்சரித்தும், திருக்கோயிலை வணங்கியும்வந்தால் தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும் என்பது ஆகும்.

கெடுப்பதும் கொடுப்பதும் செய்யும் சனியும் மற்ற மற்ற கிரகங்களும் நம்மைத் துன்புறுத்தாவண்ணம் நாம் பரமேசுவரனின் திருவருளை எண்ணி வழிபட்டு வாழ்வில் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் பெற்று வாழ்வோமாக !

நாள் என்செயும் வினைதான் என்செயும் எனைநாடிவந்த
கோள் என்செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னேவந்து தோன்றிடினே.

— கந்தர் அலங்காரம்.


# ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின்முதல்வருமான ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் திருப்பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஆயுட் சந்தா | (உள்நாடு) | ரூ. | 100—00 |
| ,, | (வெளிநாடு) | | 125—00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | | 7—50 |
| ,, | (ஸ்ரீலங்கா) | | 10—00 |
| ,, | (வெளிநாடு) | | 12—00 |

நிர்வாக ஆசிரியர்: "ஸ்ரீ குமரகுருபரர்"
ஸ்ரீ காசிமடம் : திருப்பனந்தாள்.
தஞ்சை மாவட்டம். 612504.

செந்தமிழ்ச்செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,

சிவபூஜை குருபூஜை நன்மாகே சுரபூஜை சிறக்கச் செய்யும்
தவராச ஞாகியசண் முகதேசி கப்பெயரோய்; தருமை தன்னில்
நவமாகப் பலதொண்டு களை இயற்றிப் புகழேற்ற நல்லோய், வாழ்க்கை
அவமாகப் போகாத நெறிகாட்டும் பெருமானே, அறைதல் சேண்மோ

வணங்கியிதை எழுதுகின்றேன்; புகழ்க்கயிலைக் குருமணியின்
மாண்பார் பூஜை
இணங்குவிழா அழைப்பிதழைப் பெற்றுவந்தேன்; அன்னோர்தம்
ஏற்றம் எல்லாம்
மணங்கெழும என்னுளத்தே நிலவுகின்ற தெளியேற்கு
மகிழ்ச்சி பூத்து
வணங்கெழுசெந் தமிழ்ச்செல்வர் எனச்சிறப்புச் செய்ததனை
மறக்கப் போமோ?

இன்சொல்லால் மனமுவக்கச் செய்துணவை உண்பித்தே
எழிலார் நூல்கள்
பொன்செல்லா விடத்தினிலும் புகுமென்ற வகைதந்து,
புரிந்த தொண்டை
நன்கென்றே வாயாரப் பேசி,யருள் தேசுற்று
நாளும் யாரும்
மன்கயிலைக் குருமணி என் றேசொல்ல விளங்கியவர்
மாண்பொன் றேயோ?

அவருடைய திருவுள்ளப் படிநடந்தன் னோர்தம்பின்
அமைத்த தோன்றல்
இவனெனவே சிறக்கின்றாய்; நீஅறிவாய் அவருடைய
ஏற்றம் எல்லாம்
சிவசமயத் தோர்மறவார்; செந்தமிழோர் தாம்மறவார்;
திருக்கை யீந்த
நவமுடைய பொருள்பெற்றார் தாம்மறவார் அவருளத்தே
நண்ணி நின்றார்.

அன்னவர்தம் குருபூஜை யினில்ஆரா தனைகளும்நல்
அறிஞர் பேச்சும்
துன்னுமென அழைப்பிதழால் அறிந்துவந்தேன்; பரசிவச்செஞ்
சுடர்செய் கின்ற
இன்னருளால் நின்னுடைய நலம்வாழி! நீ ஆற்றும்
எல்லாம் வாழி!
மன்னுதவம் வாழி! உயர் தருமையா தீனம்என்றும்
வாழி! வாழி!

# திருஆக்கூர்த் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் வட்டத்தில் செம்பொனார் கோயிலை அடுத்துள்ள பேரூர் ஆக்கூர்.

இவ்வூர் மாயூரம் – தரங்கம்பாடி புகைவண்டிப் பாதையில் இரயில் நிலையமாகவும் உள்ளது இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 1 கி. மீ. தூரம் சென்றால் கோயிலை அடையலாம். மாயூரம் பொறையாறு பேருந்துப்பாதையில் ஆக்கூர்ப் பேருந்து நிலயத்தின் தென்பால் கோயில் உள்ளது. மாயூரத்திலிருந்தும் சீகாழியிலிருந்தும் பொறையாற்றிலிருந்தும் இத்தலத்திற்கு வரப்பேருந்துவசதிகள் நிரம்ப உள்ளன. பேருந்தில் வருவதே எளிமையானதாகும்.

**தலப்பெருமை :** ஊரின் பெயர் திருஆக்கூர். கோயிலின் பெயர் தான்தோன்றி மாடம். இத்தலம் சோழவளநாட்டுக் காவிரித் தென் கரைத் தலங்களில் 46 ஆவது தலமாகும். திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர் பாடியருளிய இரண்டு திருப்பதிகங்களையும், மற்றும் பல தேவாரப்பாடல்களையும் பெற்றுள்ள சிறப்புக்குரியது. பதினொராந் திருமுறையில் கபிலதேவநாயனார் இத்தலத்தைப் பாடியுள்ளார். அறுபான்மும்மை நாயன்மார்களுள் சிறப்புலிநாயனார் திருவவதாரம் செய்து, இல்லையென்னாது அடியவர் எல்லோருக்கும் திருவமுதளித்துத் தொண்டுசெய்த பெருமைக்குரியது. இத்தலக் கோயில் கோச்செங்கட்சோழநாயனார் கட்டிய மாடக் கோயில்களுள் ஒன்றாய்த் திகழும் சிறப்பினதாகும். இத்தலத்திலுள்ள ஆயிரத்தில் ஒருவர் என்னும் அழகிய மூர்த்தி தரிசிக்கத்தக்கவராவார்.

**கோயிலமைப்பு :** ஆக்கூர்ப் பேருந்து நிலயத்தை அடுத்துக் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது தான்தோன்றீசுவரர் திருக்கோயில். எதிரே திருக்குளம் உள்ளது. மூன்று நிலைகளை உடைய இராஜ கோபுரத்துடன் திருக்கோயில் திகழ்கின்றது. திருக்கோபுர வாயிலில் விநாயகர் விளங்குகிறார். வழிபட்டு உள்ளே சென்றதும் இரண்டாம் பிராகாரத்தை அடையலாம். முதலில் நடராசப்பெருமான் எழுந்தருளி விளங்கும் சபாமண்டபம் காட்சி தருகிறது. இப்பிராகாரத்தில் சுவாமிக்கு வலதுபாகத்தில் அம்பிகை கோயில் கிழக்குநோக்கி

விளங்குகிறது. அகத்தியருக்குத் திருமணக் காட்சிதந்த திருத்தலங்களுள் இதுவும் ஒன்று. கன்னிமூலையில் விநாயகரும், மேற்கே முருகனும் விளங்குகின்றனர். வடக்கே சண்டேசர் கோயில் உள்ளது. வலமாகவந்து மாடக்கோயிலின் படிகளில் ஏறிச் சுவாமியைத்தரிசிக்கச் செல்கிறோம்.

மாடக்கோயில் நிலமட்டத்திலிருந்து ஐந்துமுழ உயரத்தில் விளங்குகிறது. எதிரே விநாயகரை வழிபட்டு, படிகளில் ஏறி மேலே சென்றதும் நந்தி பலிபீடங்களைக் காணலாம். அதை அடுத்து முன் மண்டபம் உள்ளது. இங்குப் பஞ்சமூர்த்திகளும் நவக்கிரகங்களும் உள்ளனர் அதையடுத்து மகாமண்டபமும் தொடர்ந்து முதற்பிராகாரமும் உள்ளன.

முதற்பிராகாரத்தில் தெற்கே பாணலிங்கம், விசுவநாதர், விசாலாக்ஷி, சிறப்புலிநாயனுர், சமயாசாரியர்; மேற்கே விநாயகர், முருகன் கஜலக்ஷ்மி; வடக்கே கைலாசநாதர் காமாக்ஷி மற்றும் பல சிவலிங்கமூர்த்திகள் உள்ளனர். அடுத்து ஆயிரத்துள் ஒருவராக எழுந்தருளிய பெருமான் தனி விமானத்தில் எழுந்தருளி விளங்குவதைக் காணலாம். இவர் இத்தலத்திற்குரிய சிறப்புமூர்த்தியாவார் கர்ப்பக்கிருகக்கோஷ்டங்களில் தெற்கே அகத்தியர் நர்த்தனவிநாயகர் தக்ஷிணமூர்த்தி, மேற்கே இலிங்கோற்பவர், வடக்கே பிரமன், துர்க்கை மார்க்கண்டேயர் ஆகியோர் உள்ளனர். சிறிய துவாரபாலகர்களுடன் சுவாமி சந்நிதி விளங்குகிறது தான்தோன்றீசர்சந்நிதி நம் உள்ளங்களைக் கவரும் அருட்பொலிவோடு திகழ்கிறது. வெளிவாயிலில் சூரியன், பைரவர் உள்ளனர். அம்பிகை கோயில் தனி மண்டபங்களோடு அழகுற விளங்குகிறது.

வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினான் தொல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே.

நன்மையான் நாரணனும் நான்முகனும் காண்பரிய
தொன்மையான் தோற்றங்கேடு இல்லாதான் தொல்கோயில்
இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லையென்னாது ஈந்துவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே.

என்ற பாடல்களை ஓதி வழிபட்டு இன்புறலாம்.

**திருமுறையில்;** திருஞானசம்பந்தர் அருளிய இந்தத் தலத் தேவாரத் திருப்பதிகத்தில் இவ்வூரில் வாழும் சைவர்கள் சிறப்பித்துக்

கூறப்பெற்றுள்ளனர். இவ்வூரில் வாழும் அந்தணர்களும் வேளாளர்களும் பொய்யிலா மெய்ந்நெறியை மேற்கொண்டவர்கள் என்றும், பூவொடு நீர் சுமந்து இறைவனை வழிபடுபவர்கள், இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லையென்னாது ஈந்துவக்கும் தன்மையார் என்றும் கூறப்பெற்றுள்ளனர். அந்தணர்கள் 'அங்கம் ஆறுடு அருமறைகள் ஐவேள்வி கற்றவர்' என்றும், நான்மறையோடு ஆறங்கம் பல்கலைகள் தாங்கினர் என்றும் பாராட்டப்பெறுகின்றனர். வேளாளர்கள் - 'வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர்' என்று போற்றப்பெறுகின்றனர். திருஆக்கூர்த் தான்தோன்றிமாடம் சிவபெருமான் விரும்பியுறையும் பழமையான கோயில் என்று கூறப்பெறுகிறது. அப்பர் அருளிய திருப்பதிகம், ஆக்கூரில் தான்தோன்றியப்பனரின் பலவகைப் பெருமைகளையும் பாங்குற அருளிச்செய்கிறது.

இத்தலத்திற்கு 'ஞானசம்பந்தர் அப்பர் அருளிய இரண்டு திருப்பதிகங்களோடு தேவாரப்பாடல்கள் வேறு சிலவும் உள்ளன. ஆறாந் திருமுறையில் ஐந்து பாடல்களும் (6—7—10, 6—41—6, 6—58—3, 6—68—7, 6—70—2). ஏழாந் திருமுறையில் (7—31—8) ஒரு பாடலும் உள்ளன. இவைகளில் இத்தலப்பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. பதினொராம் திருமுறையில் கபிலதேவநாயனர் அருளிய திருவந்தாதியில்,

ஆக்கூர் பனிவாடா ஆவி சோர்ந்து ஆழ்கின்றேன்
ஆக்கூர் அலர்தாள் அழகிதா — ஆக்கூர்
மறையோம்பு மாடத்து மாமறையோ நான்கு
மறையோம்பு மாதவர்க்காய் வந்து.

என்று அருளிச்செய்துள்ளார். பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில், இவ்வூர் வேதியர்கள் இன்மையால் இரந்து சென்றோர்க்கு இல்லை என்னாது ஈயும் தன்மையார் என்றும், இவ்வூர்ச் சோலைகளிலும் மாடங்களிலும் மறைமுழக்கங்கள் இடைவிடாது கேட்கும் என்றும் வீதிகளில் ஓமப்புகை மணம் வீசும் என்றும் கூறப்பெற்றுள்ளன.

சேக்கிழார்பெருமான் ஆக்கூர் என்ற பெயர் இவ்வூருக்கு அமைந்த காரணத்தை விவரிப்பார்போலத் திருவை ஆக்கும் ஊர் திருவாக்கூர் எனக் கூறியுள்ளார். திருவாக்கூர் என்ற பெயரே இன்று மக்கள் வழக்கில் ஆக்கூர் என்று வழங்கப்பெறுகிறது.

**தான்தோன்றி மாடம் :** மாடம் என்னும் பெயரமைந்த இரண்டு திருக்கோயில்கள் தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் ஒன்று கடந்தை என்னும் பெண்ணுகடத்தில் உள்ள தூங்கானைமாடம்.

"கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே"

என்று போற்றுகின்றது தேவாரம். பிறிதொருமாடம் ஆக்கூரில் சுயம்புவடிவான ஈசன் உறையும் திருக்கோயிலாகும். இக்கோயில் தான்தோன்றிமாடம் எனப் பெயர் எய்தியது.

**ஆயிரத்தில் ஒருவர்:** இத்தலத்தில் மன்னன் ஒருவன் இறைவன் கட்டளைப்படி ஆயிரம் அந்தணர்களுக்கு உணவளித்தான். இறைவன் அவர்களுள் ஒருவராய்வந்து உணவு உண்டு மன்னனுக்கு அருள்புரிந்தார். ஆயிரத்துள் ஒருவராய் வந்த இறைவன் திருவுருவம் கோயிலில் இருக்கிறது.

**சிறப்புலி நாயனுர்:** பூந்தண்பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல்நாடாகிய சோழவள நாட்டைச் சேர்ந்த ஆக்கூர் என்னும் இத்தலத்தில் இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லையென்னுது ஈந்துவக்கும் தன்மையாராகிய அந்தணர் குலத்தில் அவதரித்தவர் சிறப்புலி நாயனுர். இவர் 'சீர்கொண்ட புகழ்வள்ளல்' எனத் திருத்தொண்டத் தொகையில் சிறப்பித்துப் போற்றப்படுகிறுர். இவர் சிவனடியார்கள்பால் பேரன்புடையராய், அடியார்களை எதிர்கொண்டு வணங்கி இன்னுரை பகர்ந்து திருவமுது செய்வித்து அவர்கள் விரும்புவனவற்றைக் கொடுத்து மகிழ்பவர். இவர் திருவைந்தெழுத்து ஓதிச் சிவபெருமானைக் குறித்துச் செய்தற்குரிய வேள்விகள் புரிந்து இடையருப் பேரன்பால் நல்லறங்கள் பலசெய்து சிவபெருமான் திருவடிநிழலை அடைந்தார்.

**மூர்த்திகள்:** இறைவன் திருப்பெயர் அருள்மிகு தான்தோன்றியப்பர். வடமொழியில் சுயம்புநாதர் என்பர். இறைவி திருப்பெயர் அருள்மிகு வாள்நெடுங் கண்ணம்மை. வடமொழியில் கட்கநேத்திரி எனப்பெறுவார்.

தீர்த்தம் - குமுத தீர்த்தம்; கோயிலின் பின்புறம் உள்ளது.

**கல்வெட்டு:** இத்திருக்கோயிலில், சோழ மன்னர்களில் இரண்டாம் இராசாதிராசன், திரிபுவன சக்கிரவர்த்தி இராசராசதேவன் இவர்கள் காலங்களிலும், பல்லவமன்னருள் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும், விசயநகர பரம்பரையில் வீரகிருஷ்ணதேவராயர் காலத்திலும் பொறிக்கப்பெற்ற ஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளுள் சிவபெருமான், திருத் தான்தோன்றிமாடமுடையார் என்னும்

பெயரால் வழங்கப்படுகின்றனர். ஆக்கூர், இராசேந்திரசோழ சதுர் வேதிமங்கலத்திற்கு உட்பட்டிருந்தது ஊர் அலுவல்களைப் பெருங் குடி மக்கள் கவனித்து வந்தனர். இவர்கள் கூட்டப்பெருமக்கள் எனவும், திரிபுவன சக்கிரவர்த்தி இராசராச தேவரின் பதினெட்டாம் ஆண்டுக் கல்வெட்டில் கூறப்படுகின்றனர்.

இத்திருக்கோயிலில் வைகாசி மாதத்தில் திருவிழா நடந்து வந்தது. விழாமுடிவில் பெருமான் தீர்த்தமாடுதற்குக் காவிரிக்கு எழுந்தருளுவது உண்டு. இங்ஙனம் எழுந்தருளுவதற்குப் பெருவழி இன்மையால் அதைப் புதிதாக அமைக்க வேண்டுமென்று கும்ப ஞாயிறு முதல் ஊர்க்காரியங்களைக் கவனிக்கும் கூட்டப் பெருமக்கள் ஏற்பாடுசெய்ததை ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.

அழகிய பல்லவர் அரையராகிய வீரப்பிரதாபர், ஹொய்சளர் களைச் சிறையிலடைத்தும், பாண்டிய மன்னரிடம் கப்பம் வாங்கியும், சோழநாட்டிற் புகுந்து காவிரித் தென்கரை வழியாகக்கிழக்கேசென்று, பாடல்பெற்றதலங்களை வணங்கி அவைகளுக்கு இறையிலி நிலங்கள் அளித்தும், பழுதுற்ற கோயில்களைப் புதுப்பித்தும் வந்தார் அவர் ஜெயங்கொண்ட சோழவளநாட்டில்ஓர் ஊரில் தங்கியிருந்தபோது, ஆக்கூர் முதலான ஊர்களில் அதிக வரிகளால், குடிகள் நிலத்தைப் பயிரிடாமல் இருந்தார்கள். சிலர் வெளியேறிவிட்டனர் இவர்களை யெல்லாம் அழைத்து வரிகளைக் குறைத்து நிலத்தை உழச்செய்தார். இதை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.

அக்கிருந்த வாரமு மாடரவு மாமையும்
தொக்கிருந்த மார்பினன் றோலுடையான் வெண்ணீற்றன்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தா ராக்கூரிற் றான்றோன் றி மாடமே.

— திருஞானசம்பந்தர்.

முடித்தா மரையணிந்த மூர்த்தி போலும்
மூவுலகுந் தாமாகி நின்றார் போலும்
கடித்தா மரையேய்ந்த கண்ணார் போலும்
கல்லலகு பாணி பயின்றார் போலும்
கொடித்தா மரைக்காடே நாடுந் தொண்டர்
குற்றேவல் தாம்மகிழ்ந்த குழகர் போலும்
அடித்தா மரைமலர்மேல் வைத்தார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே.

— திருநாவுக்கரசர்.

# "நக்கீரர்கண்ட நற்காட்சி"

சித்தாந்தப்புலவர்மணி.

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

**முன்னுரை :**

தமிழார்வமும் அன்பும் உடைய தக்கார் அனைவரும், சங்ககாலத் தமிழ்ப்பெரும்புலவர் தலைவரும் சான்றோரும் ஆகிய நக்கீரர் என்னும் நல்லிசைக் கவிஞரை அறிவர். அவர் இயற்றிய நூல்களுள் திருமுருகாற்றுப்படை என்பது, மிகவும் புகழ்பெற்றதொன்று.

**ஆற்றுப்படை :**

தமிழ்ப்பெருங் கடவுள் ஆகிய முருகனின் அருளைப் பெற விரும்பும் அன்பன் ஒருவனுக்கு, அவனருளைப்பெற்ற சான்றோன் ஒருவன், முருகனின் இயலையும், செயலையும் எடுத்து மொழிந்து, அப்பெருமான் எழுந்தருளி விளங்கும் தலங்களைப்பற்றிக்கூறி, அவனைக் கண்டு வழிபடும் வகையினையும் அறிவித்து, முருகனிடத்தே அவ்வன்பனை ஆற்றுப்படுத்தும் நிலையில் பாடப்பெற்ற அரும்பெறல் நூலே திருமுருகாற்றுப்படை

**முருகன் :**

அதன்கண் நக்கீரர், முருகனைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கும் சிறப்புரை, அழகுற அமைந்துள்ளது. முருகப்பெருமான், சேந்தன் என வழங்கும் தன் பெயருக்கு ஏற்ப, மிக்க செந்நிறம் வாய்ந்தவன். சேண் விளங்கு அவிர் ஒளியாகச் சோதி வடிவமாகத் திகழ்பவன். அவன் தன்னை வழிபடும் அன்பின் மிக்க அடியார்கட்கு அருள்புரிய, நீலநிறம் கொண்ட மயிலாகிய பறவையின் மீது இவர்ந்து எழுந்தருளிப் போதருகின்றான். அக்காட்சி, நீல நிறக்கடலின் முகட்டில் ஊர்ந்து வரும் உதயச் செஞ்ஞாயிற்றைப் போன்றுள்ளது என்கின்றார் நக்கீரர்;

" உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி "

என்பன, திருமுருகாற்றுப்படையின் தொடக்க வரிகள். இவ்வரிகள் செவ்விய இனிய பொருள்நலங்கள் பல செறிந்து திகழ்கின்றன.

**நுண்பொருள் :**

(1) ஞாயிற்றின் உதயத்தைக் கண்டு, உயிர்கள் அனைத்தும் உவப்புறுகின்றன; அதுபோல முருகனின் அழகிய காட்சியைக் கண்டும், அன்பர்கள் அனைவரும் அகமிக மகிழ்கின்றனர்.

(2) ஞாயிற்றின் ஒளி, உலகுக்குப் பெருநலம் புரிந்து வருகின்றது; அதுபோல முருகனின் திருவருள், உலகுயிர்களுக்குச் செய்து வரும் நலங்களுக்கும் எல்லையே இல்லை.

(3) ஞாயிற்றின் ஒளிநலத்தினைப் பெரிதும் விரும்பி. அதனைப் போற்றுதார் எவரும் இலர். எல்லாச் சமயத்தவரும் சூரியனைப் புகழ்ந்து போற்றி வழிபடுவது உண்டு. அம்முறையில், முருகன் என்னும் தமிழ்க்கடவுளின் தத்துவச் சிறப்பினையும், அறிஞர்கள் அனைவரும் புகழ்ந்து போற்றி மகிழ்கின்றனர்.

(4) ஞாயிறு உலகின் புறஇருளை நீக்கும்; முருகன் தன் அடியவர்களின் அக இருளைப் போக்கியருள்வன்.

(5) ஞாயிறு தீய புன்மைகளைக் காய்ந்து, தூய நன்மைகளை வளர்ப்பன்; அங்ஙனமே முருகனும் கொடியோரைச் செற்றுச் செவ்வியோர்க்குத் தண்ணளிகள் இயற்றுவன்.

(6) ஞாயிற்றின் ஒளியும் வெப்பமும். உலகுயிர்களின்வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் இன்றியமையாதன; அங்ஙனமே முருகனின் திருவருளும் உலகுயிர்கள் அனைத்திற்கும் இன்றியமையாததாக இருக்கின்றது.

(7) நீலக்கடலின் ஓரத்தில் தோற்றும் காலைச் செங்கதிரவனின் ஒளியிற் படிந்து, அவன் திரட்டிவரும் இனிய மெல்லிய காற்றினை (Ozone) நுகர்வோர், உடற் பிணிகள் நீங்கி நலம்பல பெறுவர்; அவ்வண்ணமே நீலமயில் ஏறிவரும் சேயோன் ஆகிய முருகனைத் தமது மனத்தே நினைத்துத் தியானித்து வழிபடுவோர், அவன்றன் திருவருளால் உளப்பிணிகள் அனைத்தும் ஒழிந்து உயர்நலங்கள் பல உறுவர்.

இங்ஙனம் ஆசிரியர் நக்கீரனாரின் அறிவாராய்ச்சி மிக்க புலமை உள்ளத்திற்குக் காலைக் கதிரவன் உதயக்காட்சி, கடவுட் காட்சியையும் உணர்வையும் உண்டாக்கிய செய்தியைத் திருமுருகாற்றுப்படை நமக்குத் தெரிவிக்கின்றது.

**ஜீன்ஜேக்ஸ் ரூஸோ :**

இங்ஙனமே பிஃரான்சு நாட்டில் வாழ்ந்திருந்த தத்துவநூற் பேராசிரியர் ஆகிய ஜீன் ஜேக்ஸ் ரூஸோ (1712—1778) என்னும் அறிஞர் ஒருவருக்கும், காலைச் செஞ்ஞாயிற்றின் உதயக்காட்சி,

கடவுள் உணர்ச்சி ஊட்டிய செய்தியை, அவரே பின்வருமாறு கூறி யிருத்தல், நாம் இங்கு உணர்ந்து மகிழ்தற்குரியது.

"ஆ, பெருமாட்டி: சில சமயங்களில் எனது படிப்பறையில் தனிமையாக, யான் என் கைகளினுல் கண்களைப் பொத்திக் கொண்டு, அல்லது இரவின் இருளிலோ இருக்கும்போது, கடவுள் இல்லை என்று யான் கருதுவது உண்டு. ஆனால் அதோ பாருங்கள்; உலகைக் கவிந்து கொண்டிருக்கும் பனிப்படலங்களைச் சிதறச்செய்து கொண்டும், இயற்கையின் மினுமினுப்பான வியத்தகு காட்சி களை வெளிப்படுத்திக்கொண்டும், உதய ஞாயிறு தோன்றுகின்றது. புறத்தே கவிந்துள்ள பனிப்படலங்களை மட்டுமே யல்லாமல், என் உள்ளத்தே சூழ்ந்துள்ள அறியாமையையும் ஐயமுமாகிய மேகங்களை யுங்கூட, அஃது அகன்றொழியுமாறு செய்கின்றது. என்னுடைய பக்தி உணர்வையும், எனது கடவுளையும், அவரிடத்தில் என் நம் பிக்கையையும், யான் மீண்டும் கண்டுணர்கிறேன் நான் அவரை வியக்கின்றேன், நான் அவரை வழிபடுகிறேன்; அவர் முன்னிலையில் யானே அவரது திருவடிகளில் நெடுக விழுந்து பணிந்து வணங்கு கின்றேன்."*

**முடிவுரை :**

நக்கீரர் கண்ட நற்காட்சியும், ஜீன் ஜேக்ஸ் ரூஸோ என்னும் பிஃரான்சு நாட்டுத் தத்துவ அறிஞரின் உள்ளத்து உணர்ச்சியும், எத்துணைப் பொருத்தமுற ஒன்றி இயைந்து காணப்படுகின்றன என் பது, நாம் ஒப்பீட்டு ஆய்வு முறையில் உணர்ந்து சிந்தித்து இன்புறு தற்குரியது, நக்கீரர் துதித்துப் போற்றிய முருகனை, நாமும் துதித்து, போற்றி, நலங்களெலாம் பெற்று மகிழ்ந்து, வளமுற வாழ்வோமாக!

---

* "An, Madam!' Rosseau writes to an aristecratie lady. 'Semetsmes in the privacy of my study, with my hands pressed tight ever my eyes or in the darkness of the night, I am of opinion that there is no God. But look yonder; the rising of the sun, as it scaiters the mtsts that cover the earth, and lays bare the wondrous glittering scene of nature disperses at the same moment all cloud from my soul. I find my faith again, any my God and my belief in Him. I admire and adore Him and I prostrate myself in His presenee."

Quoted by
Dr. Bertrand Russel,
in his "History of Western Philosophy" P. 666.

# கீதக் கண்ணாடி

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

**அகப்பூசை :**

மனமொழி மெய்களால் இறைவனை வழிபட்டு உய்வது மாந்தர் கடன். மனத்தால் வழிபடுவது அகப்பூசை எனப்படும். இதனை அப்பரடிகள்,

" காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே " (4-76-4)

என்று அழகுற விளக்கியருள்வர். திருமூலதேவரும்,

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே " (1823)

என்ற திருமந்திரத்தால், இவ்வகப்பூசையே சிறந்த சிவபூசை என்பது தோன்ற உணர்த்தியருளினர். சைவசித்தாந்த சாத்திரப் பனுவலாகிய திருக்களிற்றுப்படியாரும் பின்வரும் அழகியதிருவெண்பா வினால், அகப்பூசை மாண்பினை உணர்த்துகின்றது :-

" தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பாம் மஞ்சனநீர் தாமாட்டித் — தம்மையொரு
பூவாக்கிப் பூவழியாமற் கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே உளன் " (44)

**இசை வழிபாடு :**

மொழியால் வழிபடுவது அகப்பூசைக்கு அடுத்தநிலையில் கருதப் படுவது. 'நாதோபாசனை' என்று கூறப்படுவது இதுவே.

" வாயே வாழ்த்துகண்டாய் — மதயானையுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்றன்னை
வாயே வாழ்த்து கண்டாய் " (4-9-5)

என்று அப்பர்பெருமான் திருவங்கமாலைத் திருப்பதிகத்தில் கூறுவது இங்குக் கருதத்தக்கது. வணங்கத் தலைவைத்து, வார்கழல் வாய் வாழ்த்தவைத்து, இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தவன் இறைவன் என்பது நாயன்மார் கண்டநெறி.

## இறைவன் உவக்கும் இன்றமிழ் மாலைகள் :

அடியார் கூறும் திருப்பாட்டுக்களில் பெருமான் தன்னை மறந்து இன்புற்றுத் திளைக்கும் இயல்பினன் என்பது மூவர் தேவாரங்களில் காணப்பெறும் செய்தி.

" பண்ணின் இன்மொழி கேட்கும் பரமன் " (5-18-4)

" பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தற்கு
அண்ணித் தாகும் அமுது " (5-44-8)

என்று பெருமானைப் போற்றுவர் உழவாரப்படையாளியார். அதுமட்டுமன்றி, இறைவனுக்குச் செய்யும் திருப்பணிகளை வியந்து போற்றும் போது நீரால் விளக்கியும் மெழுகியும் செய்யும் தொண்டிற்கும், பூத்தொடுத்து வழிபடும் பணிக்கும், திருவிளக்கு இடும் பணிக்கும் பயன் குறித்த நாவரசர், கீதங்களைப்பாடி வழிபடும் தொண்டிற்கு இறைவன் அருளுமாறு அளத்தற்கு அரியது என்று அருளியதிறம் ஆழ்ந்து உணர்தற்குரியது.

" அளப்பில கீதம்சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே "
(4-77-3)

இறைவனுக்குப் பெரிதும் உகந்தது, அவன்புகழ் பாடிப் பரவுவது ஆதலின், நாயன்மார் பெரிதும் இதனை மேற்கொண்டு பக்திநலம் பெருக்கினர்.

## திருமூலர் காட்டும் – 'கீதக்கண்ணாடி'

திருமூலர் 'தோத்திரம்' என்ற தலைப்பில், இந்த நாத உபாசனையை – பாடிப் பரவும் வழிபாட்டை மிகவும் போற்றியுள்ளார்: அவன் புகழ்களை விரித்துரைக்கும் இனிய கீதங்களே அவன் பெரிதும் விழைந்து நோக்கும் கண்ணாடி என்று பாராட்டியருளினர்; அவனைக் காண்டற்கேற்ற கண்ணாடி என்றும் பொருள்படும்படி அவ்வழகிய திருமந்திரம் அமைந்தமை உணரத்தக்கது :-

" பூதக் கண்ணடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக் கண்ணடியில் வேறே வெளிப்படும்
நீதிக் கண்ணடி நினைவார் மனத்துளன்
கீதக் கண்ணடியிற் கேட்டு நின்றேனே " (2986)

நீதிக்கண்ணாடி நினைக்கின்றவர் உள்ளத்துள் உள்ளவனுகிய அப்பெருமானை இனிய கீதங்களாகிய கண்ணடிவழியே கேட்டுநின்றேன் என்று தம்மனுபவம் கூறுவார்போன்று, அவனது இசை விருப்பத்தை எடுத்துரைக்கின்ருர் திருமூலதேவர்.

## அப்பர் காட்டும் 'தமிழ்ப்படிமக்கலம்'

திருநாவுக்கரசர் சிவபெருமானைத் தமிழ்மாலைகளால் வழிபட்ட தம்முடைய அனுபவம் தோன்றத் திருவாரூர்த் திருவிருத்தத்துள் இவ்வுண்மையை மேலும் விளக்கியருளினர். " திருவாரூரில் எழுந்தருளியுள்ள சிவபிரான் படிமக்கலம் விழைகுவராதலின், தமிழ்மாலைகளால் படிமக்கலம் (கண்ணடி) புனைந்து தொழுது உய்வாயாக நெஞ்சமே " என்று நெஞ்சறிவுறுத்துவாராக அருளினர். திருமூலதேவர் 'கீதக்கண்ணடி' என்றருளிய தொடர்க்கு இங்கு விளக்கத்தைக் காண்கின்ருேம் அன்ருே ?

" பூப்படிமக்கலம் பொற்படிமக்கலம் என்றிவற்ருல்
ஆம்படிமக்கலமாகிலும் ஆரூர் இனிதமர்ந்தார்
தாம் படிமக்கலம் வேண்டுவரேல், தமிழ்மாலைகளால்
நாம் படிமக்கலம் செய்து தொழுதுய் மடநெஞ்சமே "

(4-102-3)

என்பது அவ்வழகிய திருவிருத்தம்.

## பாலருவாயர் தரும் குறிப்புக்கள் :

கீதக்கண்ணடியிற் பெருவிருப்பம் உடைய சிவபிரான் நீர்மைகளைத் திருஞானசம்பந்தர் தம் திருக்கானூர்த் தக்கேசிப் பதிகத்தில் பின்வருமாறு பேசி மகிழ்வதும் இங்கு ஒப்பிட்டுணரத்தக்க ஒட்பம் உடையது :

" தமிழின் நீர்மைபேசித் தாளம் வீணைபண்ணி நல்ல
குழலம் மொந்தை மல்குபாடல் செய்கையிடம் ஓவார்
குமிழின் மேனிதந்து கோல நீர்மையது கொண்டார்
கமழும் சோலைக் கானூர்மேய பவள வண்ணரே "

(சம்பந்தர்-73-

திருஞானசம்பந்தர், பாடும்பணி மேற்கொள்வோர் திருவடிப்பேறு எய்துவது திண்ணம் என்றுணர்த்தும் இடங்கள் பல; அவற்றுள் முடிமணியாகக் கீழ்வரும் திருப்பாட்டைக் கொள்வது பொருந்தும்.

" நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டு இசை
பாடும் ஞானம் வல்லார் அடிசேர்வது ஞானமே "

( சம்பந்தர்-138-11 )

இதனாலன்றே, புள்ளிருக்குவேளூரிலும்,

" கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி "

( சம்பந்தர்-179-5 )

என்றருளினர் பாலறுவாயர்.

## 'பாடும்பணியே பணி'

அருணகிரிநாதர் திருப்புகழ்ப்பாடல்களின்வழியே திருமுருகனைப் போற்றியுள்ளார்; அனுபூதியில் அவர் வேண்டுகோள் கீதவழிபாடே; ஆம்! கந்தர் அனுபூதித் தொடக்கமே இதுதான்.

" ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய் " (1)

'பாடிப் பரவுதற்கேற்ற குரல்வளம் இல்லையே' என்று யாரும் கருதி மயங்கவேண்டியதில்லை; தன் அடியவர் பாடும் பாடலை உவந்து ஏற்று அருள்செய்யும் பெருங்கருணையாளன் பெருமான் என்று திருஞானசம்பந்தர் தெளிவுறுத்துகின்றனர்.

" கோழை மிடறாக கவி கோளுமிலவாக
இசை கூடும் வகையால்,
ஏழை அடியாரவர்கள் யாவை சொன
சொல்மகிழும் ஈசன் " ( சம்பந்தர்-329-1 )

## குறிக்கோளை அடைவிப்பது :

இறைவன் திருச்செவிகளில் இனிய தமிழ்மாலைகளை விழுமாறு செய்து நாளும் வழிபாடுசெய்த நாயன்மார் திருவுள்ளத்திற்கேற்ப, நாமும் அத்தகு பாடல்களை உணர்ந்து ஓதி இன்புறுவோமாக. திருமூலதேவர், திருநாவுக்கரசர் திருவுள்ளங்களுக்கிசையப் பெருமான் விழையும் '**கீதக் கண்ணாடி**' களுக்குத் தமிழில் பஞ்சமா? நமது உள்ளம் உருக்கும் பண்ணிசை அமுதங்களாக நம் பெருமக்கள் படைத்துள்ள தெய்விகத் திருப்பாட்டுக்கள் உள்ளன; அவற்றை ஓதும் உள்ளந்தான் நமக்கு வேண்டும். பிறகு எங்கும் இன்பம்தான்! சிவமயந்தான்! உலகியல் துன்பங்களிலிருந்து விடுதலைதான்! ஆம்; அதுவன்றே வாழ்வின் குறிக்கோள்!

# இந்து ஆலயங்களில் உள்ள ஐந்து பிராகாரங்களின் கதை

மனச்சாந்திக்காகவோ அல்லது அதைச் செய்தாக வேண்டும் என்பதற்காகவோ இன்றைக்கு அனேகம் பேர் கோயிலுக்குச் சென்று வருகின்றனர். சிவாலயங்களிலும் இன்னும் பிறவற்றிலும் திருக்கோயிலின் உட்புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஐந்து பிராகாரங்கள் எதைக் குறிக்க அமைக்கப்பட்டிருக்கின்றன என்று இன்று பலருக்குத்தெரியாது. இயந்திரயுகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் இந்த உலகில் இன்று கோயிலுக்குப் போவது ஒரு நாகரிகமாக மாறிவருகிறது. இன்னும் சிலர் கோயில்கள் அவசியமா என்றுகூடச் சிந்திக்கின்றனர். இதுபோன்ற கேள்விகள், வளர்ந்துவரும் இந்த உலகிற்குத் தேவைதான். அவ்வாறு எழுப்பப் பட்ட சில கேள்விகளுக்கு **சன்மார்க்க சங்கத் தலைவர் தொழில் அதிபர் திரு. நா, மகாலிங்கம்** கீழ்க்கண்டவற்றை விளக்கமாகத் தந்துள்ளார்.

மனிதனது உடல்பலத்தைக்காட்டிலும், அவனது ஆன்ம பலமே அதிக சக்திவாய்ந்தது. எலும்பையும், சதையையும் இறுக்குவதுதான் உடல் பலம். ஆனால் ஆன்மபலம் என்பது சிந்தனையும் எண்ணமும் தெளிவுபெறுவதுதான். எண்ணத்திலும், சிந்தனையிலும் உறுதிமிக்கவனை நாம் பலமிக்கவன் என்பதைவிட, தைரியமிக்கவன் என்பதே பொருந்தும். மனத்தளவில் தைரியம் உள்ளவனை நெருக்கடிகள் எதுவும் செய்துவிடமுடியாது அவனது கவனமெல்லாம் தன்செயல்களைப்பற்றியேதான் இருக்குமே ஒழிய அதனால் அவன் அடையப்போகும் பயன்களைப் பற்றியதாய் அமையாது.

மனிதன் தன் ஆன்மபலத்தைப் பெருக்கிக்கொண்டு தான் எடுத்துக்கொண்ட செயல் அனைத்திலும் ஏற்றம் பெறவேண்டுமானால் முதலில் மனத்தூய்மையையும் மனவலிமையையும் அவன் பெற்றாக வண்டும். எதையாவது ஒன்றை நாம் பெறவேண்டுமாயின் அதற்கு

ஏதேனும் ஒன்றைக் கற்கவேண்டும் அல்லது அதற்கான இடத்தையும் முறைகளையும் காணவேண்டும் என்பது நமது நியதி. அப்படிக்கண்ட இடம் — மனப்பயிற்சி பெறுவதற்கான இடந்தான் " ஆலயம் " " கோயில் ". " ஆலயம் தொழுவது சாலவும் நன்று " என்ற வாசகம் இந்த அடிப்படையில்தான் எழுந்தது.

நம் மாநிலத்தில் ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. அக் கோயில்களின் அமைப்பு முறைகளில் அடங்கியுள்ள அவற்றின் தாத்பரியங்களைப்பற்றியும் சிறப்பைப்பற்றியும் நம்மில் பலருக்குத் தெரிந்திருக்காது. ஆலயங்களில் ஐந்து பிராகாரங்கள் உள்ளன. இது எதன் அடிப்படையில் அமைக்கப்பட்டது ?

உலகில் தோன்றிய பண்டைச் சிறப்புமிக்க நாகரிகங்களில் தலையானதும், சிறப்பானதும்தான் தமிழனின் நாகரிகம். இதற்கு எடுத்துக்காட்டு அவன் கோயில்களையும் சிற்பங்களையும் உருவாக்கிய முறைதான். மனிதனது உடலையே கோயிலாக்கியவன் தமிழன் தான். மனிதனுக்கு உடம்பு ஒன்றுமட்டும் அல்ல. அது ஒன்றுக்குள் ஒன்றாக ஐந்து பகுதிகளாக அமைந்துள்ளது. அதேபோல் ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஏழு படிநிலைகளையும் கொண்டது.

ஐந்து பகுதிகள் என்பவை எவை ?

உணவு உடம்பு, மூச்சு உடம்பு, மன உடம்பு, அறிவு உடம்பு, இன்ப உடம்பு என்பவையே அந்த ஐந்து பகுதிகளாகும். ஏழுபடி நிலைகள் என்பது பாதம், அடிவயிறு, மேல்வயிறு, தொப்புள், இதயம், தொண்டை, புருவமத்தி ஆகியவைகள் ஆகும். இவைகள் தாம் இந்து ஆலயங்களில் அமைக்கப்பட்டன.

## பாதம் கோபுரமாகியது

பாதத்தைக் கோபுரமாக வைத்தார்கள். அடிவயிற்றுப் பகுதி கொடிமரமாகியது. அடிவயிற்றுக்கும் தொப்புளுக்கும் இடையிலுள்ள பகுதிதான் அதிகாரநந்தி எனப்பட்டது. இதயப்பகுதியே நடராஜன் இருக்கும் இடமாகியது. தொண்டைப்பகுதியில் வாகன நந்தியும், புருவமத்தியில் இறைவனின் அருட்பெருஞ்சோதியும் இடம்பெற்றன. இதுவே ஆகமமுறை எனலாகும்

இது சைவ சமயக் கோயிலின் அமைப்புமுறை. மற்றக்கோயில் களும் சிற்சில மாறுபாடுகளுடன் இதே தத்துவங்களின் அடிப்படையில் தான் அமையப்பெற்றன.

கோயில்களின் இந்த அமைப்புமுறை தத்துவத்தை நம்முடைய மக்களுக்கு விளக்கிக் கற்பிக்க ஏனோ நாம் தவறிவிட்டோம். அதனால் கோயில் தத்துவங்களின் சிறப்பை மறந்து, அங்கு நடைபெறுகின்ற சடங்குகளுக்கு மக்கள் முக்கியத்துவம் கொடுத்துவிட்டனர்.

## சடங்குகளில் ஏற்பட்ட சலிப்பு

இந்தச் சடங்குகளில் ஏற்பட்ட சலிப்பின் காரணமாகத்தான் கோயில்களைப்பற்றி ஒன்றும் தெரியாமல் கோயில் அவசியமா? என்று கேட்கும் அவல நிலைக்கு மக்களில் சிலர் ஆளாகிவிட்டது பரிதாபத்திற்குரியதாகும்.

சடங்குகளில் உள்ள மூடநம்பிக்கைகளை எதிர்ப்பது என்பது வேறு. அதற்காக ஆலயங்களே அவசியமில்லை எனப் பிதற்றுவது வேறு. வாழையடி வாழையாகவந்த நமது அருளாளர்கள் அனைவரும் திருமூலர்முதல் திருவருள்பிரகாசவள்ளலார்வரை கடவுள் சக்தியை ஒப்புக்கொண்டு நம்பினவர்கள். அதுமட்டுமல்ல ; அத்தகையஞான தவசிகள் உலகத்தில் மக்கள்மட்டுமல்லாமல் மற்றுமுள்ள சகல ஜீவராசிகளும் ஆனந்தம் அடையவேண்டும் என்று அரும்பாடுபட்டவர்கள்.

## உடம்பு ஆலயமான கதை

அத்தகைய பெரியோர்கள்தாம் இந்த ஊன் உடம்பை ஒரு கோயிலாகவும், உயிரை எரியும்திரியாகவும் கருதியவர்கள். இவர்களால்தான் இந்த உடம்பு ஆலயமாகச் சித்தரிக்கப்பட்டது.

இவ்வகையில் ஆலயம் தொழுவது என்பதுகூட உடம்பைப் பேணிக் காப்பது என்று பொருள்படும். உடம்பைப் பேணுதல்பற்றி வள்ளலார் கூறுகையில் சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் என்பார். ஏனெனில் உடம்பு என்பது அருட்ஜோதியின் வீடு. வீட்டினைக்காத்திட, விடாது முயற்சிசெய்துவர வேண்டும். இதையெல்லாம் விட்டுவிட்டு இன்றைக்குச் சிலர் கோயில் அவசியமா? என்ற கேள்வியை எழுப்பிவருவது "நமக்கு உடம்பு அவசியமா?" எனக் கேட்பதற்குச் சமமானதே என்கிறார் சன்மார்க்கசங்கத்தலைவர், தொழிலதிபர் நா. மகாலிங்கம்.

நன்றி. — தினமலர், 21-11-79.

# ஐயனர் வழிபாடு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

## 1. கிராமதேவதைகள்

ஐயனர் – ஹரிஹரபுத்திரர், சாஸ்தா, வனரக்ஷகர், ஐயப்பன் முதலிய பல பெயர்களால் வழிபடப்பெறும் தெய்வமாவார். நம் நாட்டில் சிவபெருமான் திருக்கோயிலை ஊர்நடுவே அமைத்து ஊரின் நான்கு புறங்களிலும் ஊர்க்காவல் தெய்வங்களாக மாரியம்மன், பிடாரி, ஐயனர் முதலிய தெய்வங்களை எழுந்தருளச்செய்து மக்கள் வழிபட்டனர்.

கிராமங்களில் மழையில்லாத காலத்திலும், அம்மை, காலரா முதலிய பிணிகள் வரும் காலத்திலும் மாடுகளுக்குக் கோமாரி முதலிய நோய்கள் வரும் நேரத்திலும் மக்கள் இத்தெய்வங்களை வழிபட்டு நன்மைகள் பெற்றுவருவது கண்கூடாகும். போகம் மோக்ஷம் எனப் பெறும் பெரும்பயன்களைப் பெறுதற்குரிய தெய்வமாகச் சிவபெருமானை யும் அவ்வப்போது நமக்கு ஏற்படும் இடையூறுகளைப்போக்கிக்கொள்ள கிராமதேவதைகளையும் மக்கள் வழிபட்டுவருகின்றனர். ஐயனரின் பிறிதொரு அவதாரம் ஐயப்பன் ஆவார்.

ஐயப்பன் வழிபாடு கேரளத்தில் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகிறது. இன்று தென்னுட்டில் நகரங்களிலும் கிராமங்களிலும் பல லட்சம் மக்கள் ஐயப்பன் வழிபாட்டை மேற்கொண்டு குறிப் பிட்ட காலங்களில் கேரள நாட்டிலுள்ள சபரிமலைக்கு யாத்திரை சென்றுவருகின்றனர்.

ஒருமண்டலகாலம் காலை, மாலை இருவேளைகளிலும் நீராடித் தியானம் செய்தல், க்ஷவரம் செய்துகொள்ளாமலிருத்தல், உணவு உடை இவைகளில் சில நியதிகளை மேற்கொள்ளுதல்போன்ற சில நெறிமுறைகளைமேற்கொண்டு ‘சாமியே சரணம் ஐயப்பா’ சொல்லிக் கொண்டு மக்கள் ஐயப்பன் வழிபாட்டைச் செய்கின்றனர். விரத முடிவில் இருமுடி சுமந்து சபரிமலை யாத்திரை செய்து ஐயப்பனை வழிபட்டு நன்மைகள் பலவும் பெறுகின்றனர்.

இந்நோன்பை மேற்கொள்வோர் விரதம் முடிந்ததும் தாங்கள் மேற்கொண்ட தியானம்வழிபாடுமுதலிய பழக்கங்களைக் கைவிடாமல் தொடர்ந்து கடைப்பிடித்துவந்தால் மேலும் பல பயன்கள் விளையும்.

ஐயனர் வரலாற்றையும் ஐயப்பன் வரலாற்றையும்பற்றிய சமய நூற்கருத்துக்களை இக்கட்டுரையில் தொகுத்துக் காண்போம்.

## 2. ஐயனர் தோற்றம்

முன்னொருகாலத்தில் திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் அமுதம் பெறவேண்டித் திருபாற்கடலைக் கடைந்தனர். சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலில் அமுதகலசம் தோன்றிற்று. அதைக்கண்ட தேவர்களும் அசுரர்களும் தனித்தனியே 'இது எங்கள் முயற்சியால் வந்தது ஆதலால் எங்களுக்கே உரியது' என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட முற்பட்டனர். அதனைக்கண்ட திருமால் பிணக்கை ஒழிக்கவும், தேவர்களே சாவாமருந்தாகிய அமுதத்தை உண்டு இறவாமல் வாழவும் விரும்பி மூவுலகத்தாரும் மையல் கொள்ளும் மோகினி வடிவத்தை எடுத்தார். அம்மோகினியின் அழகைக்கண்ட அவுணர்கள், அமுதத்தைப் பெற விரும்பும் முயற்சியைக் கைவிட்டு ஆசைமேலிட்டுக்கொண்டு மோகினியைச் சுற்றிவர முற்பட்டனர்.

**திருமாலின் சூழ்ச்சி :**

மோகினி வடிவம் கொண்ட திருமால் தன்னைச் சுற்றிவரும் அசுரர்களை நோக்கி உங்களுக்குள் சிறந்தவீரன் எவனே அவனே என்னை அடைதற்கு உரியவன் என்ருர். அசுரர்கள் அனைவரும் நானேவலியவன், நானேவீரன் என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு இறந்தனர். இராகு கேதுக்களாகிய அசுரர் இருவர் மட்டும் தேவர்களோடு கூடிக் கள்ளத்தனமாக அமுதமுண்டு திருமாலால் தலைதுணிக்கப்பட்டுக் கரும்பாம்பும் செம்பாம்புமாகி அமுதமுண்ட மகிமையால் ஒன்பது கிரகங்களில் இருவராக எண்ணப்படும் பெருமையைப் பெற்றனர்.

**சிவபிரானும் மோகினியும் :**

தேவர்களுக்கு அமுதளித்தபின் திருமால் மோகினி வடிவோடு திருப்பாற்கடலின் கரையில் அமர்ந்து இருந்தார். சிவபெருமான் தமது நால்வகைச் சக்திகளில் திருமாலும் ஒருவர் என்பதைத் அறிவித்தருளும்பொருட்டு அழகிய திருவுருவோடு அங்குவந்தார். மாகினியைக்கண்டு காதல்கொண்டார். மோகினியும் சிவபிரானிடம்

காதல்கொண்டார். சிவபெருமான் மோகினியைத் தழுவவந்தார். அப்போது திருமால் நான் ஆடவன் ; அடியேனைத் தாங்கள் வந்து கூடுதல் முறையோ என்று கூறினர். பெருமான் திருமாலைநோக்கி 'நமது சக்தி நான்குவகையான பெயர்களோடு இலங்குவாள்; எனக்கு மனைவியாகும்போது பவானி என்றும், கோபம்கொண்டபோது காளி என்றும், போர்செய்யும்போது துர்க்கை என்றும், ஆணுருவடையும் போது திருமால் என்றும் பெயர்பெறுவாள் ; ஆதலின் நீ எமக்குச் சக்தியேயாவாய்' என்று கூறினர். நாம் முன்பு தாருகாவனத்திற்குப் பிக்ஷாடனராய்ச் சென்றபோது நீயும் மோகினி வடிவந்தாங்கிவந்து நம்மைக்கூடிப் பிரமனைப் பெற்ருய் அல்லவா ? இன்றும் அதுபோல் உன்னைக்கூட வந்துள்ளோம் என்று கூறி மோகினியின் கரத்தைப் பற்றினர். மோகினியும் உடன்பட்டார். நாவலந்தீவில் தேக்கு மரத்தடியில் இருவரும் கூடியின்புற்றனர்.

## ஹரிஹரபுத்திரர் :

சிவபெருமானும் திருமாலும் இவ்வாறு கூடியகாலத்தில் கருங் கடல்போன்ற மேனியும், செவ்வானம்போன்ற சடையும், செண்டா யுதம் ஏந்திய திருக்கரமும் போற்றுதற்குரிய வீரமும் கொண்டவராய் ஞானியர் போற்றும் பெருமையும் நன்மையேபுரியும் கருணையும் உடைய ஐயனர் திருவவதாரம் செய்தார். சிவபெருமான் அவருக்கு ஹரிஹரபுத்திரர் எனத் திருப்பெயர் சூட்டினர். பல வரங்களையும் தந்தார். உருத்திரர்களுள் ஒருவராக்கினர். ஒரு புவனத்தைக் கொடுத்து, தேவர்களும் முனிவர்களும் வணங்கும் தலைமை அளித்து, அவரைப் புவனத் தலைவராக்கினர். உலகங்கள் அனைத்தையும் காத்துக்கொண்டிருக்கும் பெருவரம் அளித்தார்.

மைக்க ருங்கடல் மேனியும் வானுலாம்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய்
உக்கிரத் துடன் ஓர்மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீங்கினன்.

அத்த குந்திரு மைந்தற்கு அரிகர
புத்தி ரன்எனும் நாமம் புனைந்துபின்
ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம்பல நல்கியே.

புவனம் ஈந்து புவனத் திறையென
அவனை நல்கி அமரரும் மாதவர்
எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினன்
சிவனது இன்னருள் செப்புதற் பாலதோ.

— கந்தபுராணம் - மகாசாத்தாப்படலம்.

ஐயனுர் சிவகுமாரர்களில் விநாயகர் முருகன் ஆகியோரின் இளவலா கும் பெருமையைப்பெற்று, சிவபெருமான் ஆணைப்படி, தம் கடமை களைச் செய்துகொண்டு விளங்கிவருகின்ருர் என்பது கந்தபுராணத்தில் காணப்படும் ஐயனுர் திருவவதார வரலாருகும்.

**பாத்மபுராணத்தில் :**

பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானைக்குறித்துத் தவம்செய்து 'யார் தலையில் கைவைக்கின்றேனே அவர் உடனே பஸ்மமாக வேண்டும்' என்ற வரத்தைப் பெற்ருன். தான் பெற்றவரம் சரியானதுதானு என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பிய பஸ்மாசுரன் வரமளித்த சிவபெருமான் தலையிலேயே கைவைக்க ஓடினுன். சிவபெருமான் அஞ்சியதுபோல மறைந்தார். ஐவேலிக்காய் எனப் படும் சிவலிங்கக்காயில் மறைந்திருந்தார் என்றும் சிலர் கூறுவர்,

வரம்பெற்ற பஸ்மாசுரன் உலகையே அழிக்க முற்பட்டான். திருமால் பஸ்மாசுரனின்செய்கையை அறிந்தார். மோகினிவடிவோடு சென்று அவனை அணுகினுர். பஸ்மாசுரன் மோகினியிடம் மயங் கினுன். தான்பெற்ற பெருவரத்தை மோகினியிடம் தெரிவித்தான். திருமால் பஸ்மாசுரனைநோக்கி வரம்பெற்ருல்மட்டும் போதுமா? வரத்தைப் பயன்படுத்துதற்கு உரிய மந்திரத்தைச் சொல்லுமுன் கரநியாசம் அங்கநியாசம் செய்யவேண்டாமா? என்ருர். பஸ்மாசுர னும் அவ்வாறே அங்கநியாசம்செய்ய முற்பட்டு, 'சிரசே சுவாகா' என்று கூறித் தன்கையைத் தானே தன்தலையில் வைத்துக்கொண்டு பஸ்மமானுன். மோகினி தன்னை அடையவேண்டுமானுல் எண்ணெய் தேய்த்துக் குளித்துவா என்று கூறியதாகவும் பஸ்மாசுரன் தலையில் எண்ணெய்தேய்ப்பதற்காகக் கையைவைக்கும்போது அழிந்ததாகவும் கூறுவது உண்டு. பஸ்மாசுரன் அழிந்தபின் சிவபெருமான் வெளிப் பட்டார்; திருமால் மோகினி அவதாரமெடுத்து அவனை அழித்ததை அறிந்தார். இருவரும் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அழிக்க மோகினியாகவும் பிக்ஷாடனராகவும் சென்றனர். அப்போது ஐயனுர் அவதரித்தார் என்று பாத்மபுராணம் கூறுகிறது.

## 3. இந்திராணியைக் காத்தருளியது

கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கு அஞ்சிய இந்திரன் தன்மனைவி யோடு சீகாழிக்குவந்து மூங்கிலாய் மறைந்து தங்கித் தவம் செய்ய முற்பட்டான். சூரபன்மனிடமிருந்து தன் மனைவி இந்திராணியைக் காத்தருளுமாறு ஐயனுரை வேண்டினுன். ஐயனுர் பூதகணங்கள் புடைசூழ வெள்ளையானையின்மேல் பூரணை, புட்கலை என்னும் இரு பெரும் தேவியரோடு இந்திரனுக்குக் காட்சிதந்தார். இந்திரன்

சூரபன்மன் கொடுமையால் தேவர்கள் துயருறுவதையும், அதனைச் சிவபெருமானிடம் தெரிவிக்கத் திருக்கயிலை செல்வதையும் கூறித் தான் கயிலைசென்றுதிரும்பிவரும்வரை இந்திராணியைஅடைக்கலமாக ஏற்றுக் காப்பாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். ஐயனும் அதற்கிசைந்து தனதுவீரருள் மகாகாளர் என்பவரை இந்திராணிக்குக் காவலாக இருக்குமாறு கூறி மறைந்தார்.

சூரபத்மனின் தங்கை அஜமுகி என்பாள் அங்குவந்து இந்திராணி தவம்புரிவதைக்கண்டு அவளைத் தூக்கிக்கொண்டுபோய்த் தன் தமையன் சூரபத்மனுக்கு அளிக்கவிரும்பினாள். முடிவில் இந்திராணியை அழைத்தாள். அவள் மறுக்கவே அவளை அஜமுகி தன் கைகளால் பிடித்து இழுத்தாள். அஞ்சி நடுங்கிய இந்திராணி,

பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே! ஓலம்; விண்ணோர்க்கு ஆதியே! ஓலம்; செண்டார்
கையனே! ஓலம்; எங்கள் கடவுளே! ஓலம்; மெய்யர்
மெய்யனே! ஓலம்; தொல்சீர் வீரனே! ஓலம்; ஓலம்;

ஆரணச் சுருதியோர்சார் அடலுருத் திரன் என்று ஏத்தும்
காரணக் கடவுள்! ஓலம்; கடல்நிறத்து எந்தாய்! ஓலம்;
பூரணைக்கு இறைவா! ஓலம்; புட்கலை கணவா ஓலம்;
வாரணத்து இறைமேல் கொண்டு வரும்பிரான்! ஓலம்.

என்று ஐயனாரை விளித்துத் தன் அபயக்குரலை வெளிப்படுத்திப் பலவாறு கதறினாள்.

அபயக்குரல் கேட்ட ஐயனாரின் படைத்தலைவர் மகாகாளர் தன் வாட்படையைச் சுழற்றிக்கொண்டு இடிபோல் ஆரவாரித்து வெளிப்பட்டார். அஜமுகியைத் தடுத்தார். அவர் வார்த்தையைக் கேட்க மறுத்த அஜமுகி முத்தலைச் சூலத்தையும் மலையையும் அவர் மீது எறிந்தாள். மகாகாளர் அவற்றைப் பொடிபடுத்தித் தன் ஆணையைக் கேளாது இந்திராணியைத் தீண்டிய அஜமுகியின் கையை வெட்டினார். காலால் அவளை இடறி ஓட்டினார். இந்திராணியைக் காத்த ஐயனார் கோயில் சீகாழியில் தென்பாதித் தெருவில் உள்ளது. இவ்விடத்திற்குக் கைவிடான் சேரி என்று இப்போது பெயர் வழங்கி வருகிறது.

சூரபத்மனுக்குப் பயந்த இந்திரன் கோமுத்தீசுரம் என்னும் திருவாவடுதுறைத் தலத்தில் தங்கித் தவம் புரிந்தான். அஜமுகி இந்திரனைக்கண்டு காதல் கொண்டு அவனைப் பலவந்தமாக அணைய முற்பட்டாள். அதன் காரணமாகக் கருவுற்ற அஜமுகி கிருத்தியா

என்ற பெண்குழந்தையைப் பெற்ருள். கிருத்தியை கண்ணில்கண்ட பொருள்களையெல்லாம்வாரி விழுங்கி நாசமாக்க முற்பட்டாள். ஐயனுர் சிவபெருமான் ஆணைப்படி அவளைக் கடலில் எறிந்து உலகைக் காத்தருளினுர்.

## 4. திருவுலா வெளியிட்ட திருப்பிடவூர் ஐயனுர்

சுந்தரமுர்த்திசுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனுரோடு திருவஞ்சைக்களத்தில்தங்கியிருந்தபோது ஒருநாள் அஞ்சைக்களத்து இறைவனைவேண்டி இவ்வுலகவாழ்வுபோதும் என்னை ஏற்றருள் என்ற குறிப்புடைய திருப்பதிகம் பாடி வழிபட்டார். பெருமான், இந்திரன் மால் பிரமன் முதலிய தேவர்களை அனுப்பிச் சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித்திருக்கயிலைக்கு அழைத்துவருமாறு கட்டளையிட்டார். சிவ பிரான் அருளியவாறு தேவர்கள் திருவஞ்சைச்களம் வந்து சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித் திருக்கயிலாயத்திற்கு அழைத்துச் சென்ற னர். சுந்தரர் சேரமான்பெருமானை மனத்தில் நினைத்துக்கொண்டே கயிலை சென்ருர். சுந்தரர் கயிலை செல்வதை அறிந்த சேரமான் பெருமாளும் ஒரு குதிரையைக் கொண்டுவரச்செய்து அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதி அக்குதிரைமீது ஏறிச் சுந்தரரை வலம் வந்து வான்வழியே கயிலை சென்ருர் சுந்தரர் திருக்கயிலாயம் சென்று இறைவனை வணங்கினுர். சேரமான் பெருமாள் தன்னேடு உடன் வந்திருப்பதை விண்ணப்பித்தார். இறைவன் நந்திதேவரிடம் சேரர் கோவை உள்ளே அழைத்துவரக் கட்டளையிட்டார். உள்ளே வந்த சேரர்காவலரைச் சிவபிரான் இங்கு நாம் அழையாமல் வந்தது ஏன் என வினவினுர். சேரமான் பெருமாள் சுந்தரரைப் போற்றி வந்தேன் என்று கூறித் தாம் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவைப் பாடி வணங்கினுர். சிவபிரான் அதனைக்கேட்டு மகிழ்ந்து அவரைச் சிவகணத் தலைவராக இருக்குமாறு அருள்பாலித்தார். திருக்கயிலையில் சேரமான் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவை அங்கிருந்து கேட்ட ஐயனுர் தென்னுட்டில் திருப்பிடவூருக்குக் கொண்டுவந்து தமிழக மக்கள் அறிந்துய்யுமாறு வெளிப்படுத்தினுர். இது பெரியபுரா ணத்தில் காணப்படும் ஐயனுரின் அருளிச் செயலாகும்.

திருப்பிடவூர் திருச்சிராப்பள்ளியிலிருந்து பெரம்பலூர் செல்லும் வழியிலுள்ளது. இங்குள்ள ஐயனுர் கையில் திருக்கயிலாய ஞான உலா உள்ளது. இவ்வையனுரை மக்கள் அரங்கேற்றிய ஐயனுர் என அழைக்கின்றனர்.

(தொடரும்)

# திருநள்ளாறும், சனிபகவானும்.

**தலச் சிறப்பு :**

காவிரித் தென்கரையிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று திருநள்ளாறு என்னும் திருத்தலம். மூவர்களும் பாடிய ஏழு திருப்பதிகங்களை உடையது. முசுகுந்தமன்னன் இந்திரனிடம் பெற்று வந்த ஏழு விடங்கரையும் தாபித்த ஏழு தலங்களுள் இதுவும் ஒன்று. இங்குள்ள விடங்கத்தியாகர் திருநாமம் நகவிடங்கர். இவர் ஆடும் நடனம் உன்மத்த நடனம் எனப் போற்றப்பெறும்.

பிரமதேவன் ஆதியில் பூசித்ததால் ஆதிபுரி எனவும், தல விருட்சம் தர்ப்பையாதலால் தர்ப்பாரண்யம் எனவும், நகவிடங்கர் எழுந்தருளியிருப்பதால் நகவிடங்கபுரம் எனவும், நளன் வழிபட்டமையால் நளேச்சுரம் எனவும் பலபெயர்கள் இத்தலத்திற்கு வழங்கப்படுகின்றன. நளனுக்கு நன்னெறிகாட்டி அருள்செய்த தலமாதலின் நள்ளாறு எனவும் வழங்கப்படுகிறது. இரண்டு ஆறுகளுக்கு நடுவில் தலம் விளங்குவதால் நள்ளாறு எனப் பெயர்பெற்றது எனவும் கூறுவர். இறைவன் திருநாமம் தர்ப்பாரண்யேசுவரர். இறைவி திருநாமம் போக மார்த்த பூண்முலையம்மை. சனிபகவான் இங்குச் சிறப்பு மூர்த்தியாக விளங்குகிறார்.

**பச்சைப் பதிகம் :**

சைவ சமயம் குன்றிச் சமணசமயம் வளர்ந்தோங்கியது மதுரையில். அது திருஞானசம்பந்தப் பெருமானுடைய காலம். மங்கையர்க்கரசியார் வேண்டுகோளுக்கிசைந்த ஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளினர். சமணர்கள் தம் திருமடத்திற்கு இட்ட தீயினைப் 'பையவே சென்று பாண்டியற்கு ஆகவே' என்று திருவருள்துணைகொண்டு ஏவினர். அது பாண்டியனை வெப்புநோயாகப் பற்றியது. 'மந்திர மாவது நீறு' என்ற திருநீற்றுப்பதிகத்தை ஓதி வெப்புநோயைப் போக்கினர். நலம் பெற்ற பாண்டியன் விருப்பப்படி வாதம் தொடங்கியது. முதலில் அனல்வாதம். இருதிறத்தினரும் தத்தம் மந்திரங்களை ஏட்டில் எழுதித் தீயிலிட்டால் எது பச்சையாகக் காணப்படுகிறதோ அதுவே சிறந்த சமயம் என்று ஒத்துக்கொண்டனர். சமணர்கள் எழுதியிட்ட ஏடு வெந்து சாம்பலாயிற்று. ஞானசம்பந்தப்பெருமான் தம்பாடல்கள் எழுதப்பெற்ற ஏட்டினை அவிழ்த்துப் பிரித்தபோது 'போகமார்த்த' என்று தொடங்கும் இத் திருநள்ளாற்றுப்பதிகம்

கிடைத்தது. அதனை எடுத்துத் தீயிலிட்டார். அவ்வேடு எரியாது பசுமையாகவே காணப்பட்டது. அவ்வண்ணம் சைவசமயத்தின் பெருமையை உலகறியச் செய்து பசுமையாக விளங்கியதால் இன்றும் அத்திருப்பதிகம் **பச்சைப்பதிகம்** என வழங்கப்படுகிறது. அத்தகைய திருப்பதிகத்தைப்பெற்ற தனிச்சிறப்புடையது இத்தலம்.

**நளன் வழிபட்டது :**

நிடதநாட்டு மன்னன் நளன், விதர்ப்பநாட்டு மன்னன் மகள் தமயந்தியை மணம்செய்துகொண்டான். தாமே மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற வேட்கையோடு இந்திரன் முதலியோர் நளனுருவம் கொண்டு திருமணத்திற்கு வந்து ஏமாற்றம் அடைந் தனர். அதனை அறிந்த கலிபுருடன் சினம்கொண்டான். நளனைப் பற்றுதற்குரிய காலத்தை எதிர்நோக்கி இருந்தான். ஆசார சீலமும், நல்லொழுக்கமும், செங்கோலாட்சியும் உடைய நளனை எவ்வாறு பற்றுவது என்று பன்னிரண்டு ஆண்டுகள் காத்திருந்தான். ஒரு நாள் நளன் தன்பாதங்களைக் கழுவிக்கொண்டு மாலை நேரத்திற்குரிய நித்திய கருமங்களைத் தொடங்கினான். பாதங்களைக் கழுவும்போது புறங்கால் நனையவில்லை. அதுதான் தக்கசமயம் என்று கலிபுருடன் நளனைப் பற்றிக்கொண்டான். புட்கரனோடு சூதாடச்செய்து நாடு நகரங்களை இழக்கச்செய்தான் இழந்த நளன் தன் குழந்தைகளை விதர்ப்பநாட்டுக்கு அனுப்பிவிட்டான்.

தமயந்தியுடன் கானகம் சென்றபோது அக்கானகத்தே தன் காதலியை நள்ளிரவில் விட்டுப்பிரிந்து சென்றான். கார்க்கோடகனாகிய பாம்புதீண்டியதால் கருநிறவுருவம் பெற்றான். அயோத்தி மன்னன் இருதுபன்னனிடம் தேரோட்டியாகவும் சமயற்காரனாகவும் பணியாற் றினான். தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என்பதறிந்து அங்குச் சென்ற இருதுபன்னனுக்குத் தேரோட்டியாகச் சென்றான். தன் மக்களைக்கொண்டும், அவன் சமைத்த உணவின் சுவையைக்கொண் டும் தமயந்தி தன்கணவன் என அவனை அறிந்துகொண்டாள். கார்க்கோடகன் கொடுத்த ஆடையை நளன் அணிந்து தன்முன்னைய உருவம் பெற்றான். தமயந்தியையும் மக்களையும் அழைத்துக்கொண்டு நாடு திரும்பினான்.

விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்(து)
உளங்கொள இருத்திய ஒருத்தன்இடம் என்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே.

என்று நளன் வழிபட்டுப் போற்றிய சிறப்பினை ஞானசம்பந்தப் பெரு மான் தமது திருப்பதிகத்தில் குறித்துள்ளார்

சனி பகவானும் நளன்விருப்பப்படியே இங்கு எழுந்தருளியிருந்து வழிபடுபவர்களுக்குத் துன்பநீக்கம் செய்து வருகிறார். ஒருராசியிலிருந்து மற்றொருராசிக்குப் பிரவேசம் செய்யும் சனிப்பெயர்ச்சியன்று அன்பர்கள் நளதீர்த்தத்தில் எண்ணெய் முழுக்காடி, சனிபகவான் சந்நிதியில் திலதீபமிட்டு அருச்சித்து வழிபட்டுவருதலை இன்றும் காணலாம்.

**புராண வரலாறுகள் :**

கலிங்கமன்னன் தன்னிடம்வந்த பார்க்கவ முனிவரை உபசரிக்காதத்தால் அம்முனிவரிடம் சாபம் பெற்றான். மனைவி மக்களுடன் காட்டானைகளாகத் திரிந்துகொண்டிருந்தான். நாரதமுனிவர் அருளியபடி காட்டானையாகத் திரிந்த மன்னன் இத்தலத்துக்கு வந்தான். தீர்த்தக்கரையை அடைந்ததும் அதில் நீராடுவோரின் உடலிலுள்ள நீர்த்துளிகள் தெறித்தன. தெறித்த அளவிலே மூவரும் யானைஉருவம் நீங்கிப் பழைய உருவம் பெற்றனர். மன்னன் இறைவன் பெருமையை உணர்ந்து சிறப்பு வழிபாடுகளைச் செய்வித்துத் தன்நாட்டுக்குச் சென்றான்.

தானமாகக் கிடைத்த பசுவுக்காக இரு அந்தணர்கள் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டபோது, ஒருவர் மற்றொருவரை அடித்த கோல் தவறுதலாகப் பசுவின்மீதுபட அப்பசு இறந்தது. அப்பாவத்தால் அந்தணன் விகார உருவம் பெற்று அலைந்தான். உரோமச முனிவரின் ஆணைப்படி இங்குவந்தபோது தீர்த்தமாடி வருவோரின் நீர்த்துளிபட்ட அளவில் நல்லுருவம் பெற்றான். பெருமானை வழிபட்டு இன்புற்றான்.

தண்டிகுப்தன் என்ற செல்வனின் மக்கள் இருவர் தம் கூடாவொழுக்கத்தால் எல்லாப் பொருளையும் இழந்தனர். பொருள்பெற வேண்டிக் களவுசெய்து வாழ்ந்தனர். வறுமை நீங்கவில்லை. ஒருநாள் இரவு வழியிடையில் வந்த ஒருமுனிவரை வழிமறித்தபோது, முனிவர் இரக்கம்கொண்டு நல்லுபதேசஞ்செய்து, அவர்களது மனநிலையை மாற்றினார் ; அவர்களை அழைத்துக் கொண்டு திருநள்ளாற்றுக்கு வந்து பல நாட்கள் தவறாது சிவதரிசனம் செய்யச்செய்தார். அவ்விருவரது தீவினைகள் நீங்கின. இறக்கும்போது இறைவன் உமைபாகராகக் காட்சியளித்து மிருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசித்து முத்தியின்பம் பெறச் செய்தருளினார்.

**சனிபகவான் :**

சூரியனைச்சுற்றிவரும் ஒன்பது கிரகங்களுள் சனி ஏழாவதாக விளங்குவது. வியாழனுக்கு அடுத்தபடியான பெரியகிரகம். சனி எத்தகையோரையும் தன்வழிப்படுத்துபவன். தன்னைப் பணிந்து

வணங்குபவர்களுக்கு அருள்புரிபவன். 'சனியைப்போலக் கொடுப்பவரும் இல்லை; சனியைப் போலக் கெடுப்பவரும் இல்லை' என்ற பழமொழி. இவரால் அடையும் நன்மையையும் தீமையையும் அறிவிக்கும். மன உறுதியுள்ளவரும் சனிபகவான் சஞ்சரிக்கும் சனி தெசை என்றால் சிறிது தளர்ச்சியடைவர்.

துவட்டாவின் மகள் சஞ்ஞிகை என்பவள். அவள் சூரியனுடைய முதல்மனைவி. அவளுக்கு மக்கள் மூவர். அவர்கள் வைவஸ்வத மனு, யமன், யமுனை என்போர். சஞ்ஞிகை பேரொளிவடிவினனாகிய கணவனின் வெப்பத்தையும் ஒளியையும் தாங்க இயலாமையால் தன் நிழலைப் பெண்ணாகப் படைத்தாள். அவளுக்குச் சாயாதேவி எனப் பெயரிட்டாள். அவளைப்பார்த்து 'நீ சூரியனுடன் இருப்பாயாக; உன்னைப்பற்றியோ என்னைப்பற்றியோ எவரிடமும் உண்மை உரைக்காதே' என்றுகூறித் தன் தந்தையிடம் சென்றாள். இவளுடைய மனமாற்றத்திற்கு இடம்கொடாத தந்தை கடிந்துபேசினான். நீ செய்தது கற்புநெறிக்குத் தவறு என்று இடித்துக் கூறினான். அது கேட்ட மகள் செய்வது அறியாது திகைத்தாள், திரும்பவும் சென்றால் கணவனின் கோபத்திற்கு ஆளாகநேரிடுமே என்று எண்ணினாள். வடதுருவம் சென்று கணவனைக் கருத்திலிருத்தித் தவஞ்செய்து கொண்டிருந்தாள்.

சாயாதேவி சூரியனுடன் வாழுகின்றபோது மூன்று மக்களைப் பெற்றாள். சாவர்ணிமனு, சனி, பத்திரை என்போராவர். சஞ்ஞிகை உஷாதேவி என்றும், சாயாதேவி பிரத்யுஷாதேவிஎன்றும் குறிக்கப் படுகின்றனர்.

சூரியன், தன் மாமனாகிய துவட்டாவீட்டிற்குச் சென்றான். மனைவியைப்பற்றி விசாரித்தான். அவள் பெண்குதிரை வடிவுடன் தவஞ்செய்துகொண்டிருப்பதைத் தெரிந்தான். ஆண்குதிரை வடிவுடன் அவளை அணுகினான். அவள் அஞ்சியோடவும் ஆண்குதிரையாக வந்த அவனது ஆற்றலின் துளிகள் மூக்கின்வழியாகச் சிந்தின. அவைகளில் தோன்றியவர்களே அச்சுவனி தேவர்கள் என்ற இரட்டையர். இவர்கள் தேவ வயித்தியர்கள் ஆவார்கள்.

சூரியன் தன்னைக்கண்டு அஞ்சியோடுகின்ற சஞ்ஞிகைக்கு உண்மை உணர்த்தினான். அவள் தவத்தைப் பாராட்டினான். அவளையும் சாயாதேவியையும் அழைத்துக்கொண்டு தன் இருப்பிடம் சென்றான். வைவஸ்வதமனுவை மன்னனாக அமரப் பணித்தான். யமனைக் காலனாகவும், யமுனையை நதியாகவும் உலகிற்குப் பயன்படச் செய்தான். கோள்களுள் ஒன்றாக இருந்து மக்களது நல்வினை தீவினைகளுக்கு ஏற்றபடி இன்பதுன்பங்களை அளித்துவருமாறு சனிக்கு

ஆணையிட்டான். சனியும் காசி சென்று சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்து வழிபட்டுக் கிரகவலிமைபெற்று விளங்கினான்.

சனி தன் பெரிய தாயான சஞ்ஞிகையை அலட்சியமாகப் பேசினான்; அதுபொறுக்காத அவள்மகன் யமன் சினந்து தன் தண்டத்தால் முழங்காலில் அடித்தான்; சனியின் வலக்கால் ஊனமாயிற்று; மெல்ல நடப்பவனானான்; அதனால் சனைஸ்சரன் என்று பெயர் பெற்றான் என்று சொல்லப்படுகிறது. மற்றைய கிரகங்களைவிடச் சனி மெதுவாகச் சுற்றிவருவதால் அப்பெயர் வந்தது என சிலர் கூறுவர். சனி ஒரு இராசியைக் கடக்க இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே பன்னிரண்டு ராசிகளையும் சுற்றிவர முப்பது ஆண்டுகள் ஆகின்றன. மந்தன், பங்கு, கரியன் என்ற பெயர்களும் இவனுக்கு உண்டு. சுக்கிரனும் புதனும் சனிக்கு நட்புக்கிரகங்களாகும்.

சனியின் மனைவி நீலா என்றும், மந்தா சேஷ்டை என்ற இரு மனைவியர் உண்டென்றும் கூறப்படுகின்றது. சனிக்குக் குளிகன் என்ற மகன் உண்டு என்று சோதிடநூல் கூறும். நாள்தோறும்வரும் குளிகைநேரத்தில் நற்காரியங்களைச் செய்வது சிறப்பாகும். தீயகாரியங்கள் செய்வது வழக்கமில்லை.

சனிபகவான் ஒருமுகமும் நான்குகைகளும் உடையவன்; மேல் கைகளில் வலம் இடம் அம்பும் வில்லும், கீழ்க்கைகளில் வாளும் வரதமும் கொண்டவன்; நீலமணி உடையவன், சடைமுடி தரித்தவன்; கருநிற ஆடை, கருஞ்சந்தனம், நீலமலர் மாலை, நீலமணி மாலை புனைந்தவன்; இடப்பாகத்தே நீலா என்ற தேவியைப் பெற்றுத் திகழ்பவன் என நவக்கிரக ஆராதனம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

விஷ்ணுதர்மோத்திரம் என்ற நூல் சனிபகவான் ஒருமுகமும் இருகைகளும் உடையவன் என்றும், வலக்கையில் தண்டமும், இடக்கையில் வரதமேனும் அட்சமாலையேனும் தாங்கியவன் என்றும், கருநிறமேனி கொண்டவன் என்றும், முடவன் என்றும் கூறுகிறது.

சனிபகவான் வில்வடிவான ஆதனத்தில் சூரியனுக்கு முன்பாகிய மேற்குத் திசையைத் தனக்கு உரிய இடமாகக் கொண்டு சிறிது குறிய வடிவினனாக வீற்றிருப்பவன்; அலித் தன்மையும் தாமத குணமும் கொண்டவன்; உலோகம் இரும்பையும், இரத்தினம் நீலத்தையும், தானியம் எள்ளையும், புஷ்பம் கருநீல மலரையும், சமித்து வன்னியையும் சுவை கசப்பையும், பாஷை அந்நிய பாஷையையும், வாகனம் காகத்தையும், கழுகையும் தனக்கு உரிமையாக உடையவன்; ஆயுள் காரகனாய் மகர கும்ப ராசிகளுக்கு அதிபதியாய் விளங்குபவன்.

இவனுக்கு அதிதேவதை யமனும் பிரதி அதிதேவதை பிரஜாபதியும் ஆவர். இவர்கள் முறையே சனிபகவானுக்கு வலமிடம் திகழ்வர்.

இரும்பால் ஆகிய சட்டியில் நல்லெண்ணெய் விட்டு அதில் சனி இருப்பதாகப் பாவித்து முகம் பார்த்துத் தானம் செய்வது சனியினுல் ஏற்படும் சகல பீடைகளையும் போக்கும்.

திரயோதசி மாலைநேரத்திலே உள்ள நாளுக்கு மகாப்பிரதோஷம் என்று பெயர். அதுவும் சனிக்கிழமை வருமாயின் மிகவும் சிறப்புடையது. சனிப் பிரதோஷம் சிவபெருமானை வழிபடச் சிறந்த நாளாகும்.

கோட்சாரபலன் அவரவர்களுக்கு அந்தந்தக் கிரகங்களின் தெசா புத்திகளின் நன்மை தீமைகளை அனுசரித்தே ஏற்படும். நல்ல தெசா புத்தியாக இருக்குமானுல் சனியால் தீமை விளையாது. சனிக்கிழமை விரதமிருத்தல், தில தீபம் ஏற்றிவைத்தல், விசேஷ அபிஷேக ஆராதனை செய்தல், தோத்திரம் செய்தல் ஆகியவற்ருல் சனிபகவான் மன மகிழ்வர்.

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது பழமொழி. ஆகவே இறைவன் இயக்க எல்லாம் இயங்குவன. நவக்கிரகங்களும் இறைவன் ஆணையால் இயங்குவனவே. ஆதலின் அகில உலகத்திற்கும் மூல காரணனுகிய பரமேசுவரனை வழிபடுவதால் அவர் இயக்க இயங்கும் நவக்கிரக சஞ்சாரத்தால் தீமைவரும்போது அதன் வலிமை குறையும்; நன்மைமிகும்.

'கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே', 'குலம்கொடுத்துக் கோள்நீக்க வல்லான்றன்னை' என்ற திருமுறைப் பகுதிகளும், 'நாள் என்செயும் வினைதான் என்செயும் எனை நாடிவந்த கோள் என் செயும்' என்ற கந்தரலங்காரப் பாடற்பகுதியும் இறைவன் திருவருள் வலிமையால் கிரகசஞ்சாரங்களால் ஏற்படும் தீமைகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதை அறிவிப்பனவாம்.

'நாளும்கோளும் நலம் தருவனவாகஇல்லை; ஆதலின் மதுரைக்கு எழுந்தருளுவது ஏற்புடையது அன்று' என்றுதிருநாவுக்கரசர் அருளிய போது ஞானசம்பந்தப்பெருமான் 'நமது சிவபெருமானுடைய திருவடிகளையே நாம் போற்றுவதனுல் தீங்கு ஒருபோதும் வந்துசேராது' என்று மறுமொழிபகர்ந்ததும், சிவபெருமான்என்னுள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளியிருப்பதால் நாள்களும் கோள்களும் நலமே செய்யும் என்ற திருவுள்ளக்குறிப்புடன் 'வேயுறு தோளிபங்கன்' என்று தொடங்கும் திருப்பதிகத்தை ஓதிப் புறப்பட்டதும் திருவருள் துணை உடையாரைக் கிரகசஞ்சார பலன் ஒருபோதும் தாக்காது என்பதை விளக்குவனவாகும்.

## ஸ்ரீ சனிபகவான் தோத்திரம்

பெருவாச நளனெடும்வந் தவன்றீர்த்த மாடுதலாற்
பெற்ற பேற்றால்
ஒருவாவந் தெம்பெருமா னருள்பெற்று மிகவுமனம்
உவகை பூப்பக்
கருவாசல் புக்கார்போற் புகுந்தொளிரும் நள்ளாற்றுக்
கனக வச்ரத்
திருவாச லிடனின்ற மந்தனிரு செந்தளிர்த்தாள்
சிந்தை செய்வாம். — தலபுராணம்.

முனிவர்கள் தேவர் ஏனை மூர்த்திகள் முதலா னோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமைஅல் லால்வே றுண்டோ?
கனிவுள தெய்வம் நீயே; கதிர்சேயே ! காகம் ஏறும்
சனியனே! உனைத் துதித்தேன் தமியனேற் கருள்செய்வாயே.

## கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்.

# எதிர்காலம்

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**சித்தார்த்தி ஸு மார்கழி மீ 1உ முதல் 30உ முடிய.**

**( 16—12—79 முதல் 14—1—1980 முடிய )**

சித்தார்த்திஸு மார்கழிமீ 1உ பானுவாரம் விசாக நக்ஷத்திரம் தைதுலைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம்முதல் 15 நாழிகை 36 வினடிக்கு மீன லக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுர்ராசி சங்கிரமணமாக மார்கழிமாதப் பிரவேசம் செய்கின்றார். தேவமானத்தின்படி தேவர்களின் ஒரு தினத்தின் பிராதக்கால பொழுதாக விடிகின்றார். சங்கிரமகால வாராதிபன் சூரியபகவான் தானியாதிபதியாகிறார். அதனால் சிவந்த நிற தானியங்களான துவரை, கொள்ளு, கோதுமை மற்றும் குரூரவகை தானியங்களின் விளைவு நன்றாக இருந்துவரும். சங்கிரமகால கிரக ஸ்திதியின்பலனாவது லோகநாடுகளில் எங்கும் ஆன்றோர்களின் தர்ம நெறியில் பிரஜா சம்ரக்ஷண காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக் கும். சர்வேஸ்வரனுடைய கட்டளையின்படி தேசங்களில் ஜனாதி பதிகள் ஜனப் பிரதிநிதிகளானவர்கள் ஆஸ்திக நெறியுடன் கம்பீர புருஷர்களாகத் திகழ்ந்து திக்விஜயம்செய்து பரந்த கண்ணோட்டத் துடன் சீரிய ஆட்சி நடத்துவார்கள்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பூருவசன்மத்தி லேயே ஞானோதயம் ஏற்பட்டு உயர்ந்துவந்துள்ள சிவஞான குரு மகான்கள் லோகத்துக்கு மனுநீதி தர்மங்களையும் சிவாசார நன்னெறி யையும் போதித்து ஆசியருளிவருவதினின்றும் பிரஜாகோடிகள் உயர் வழி அடைவார்கள். லோகமெங்கும் சிவசமயம் பரவுவதாகும். தேசங்களிலெங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் ஐதீகமானமுறையில் உற்சவங்கள் விசேஷ உஷக்கால பூசைகள் சிறப்பாக நடைபெற்றுவரும். ஆங்காங்கு ஆலயங்களில் சிவபக்தர் கள் ஆஸ்திகப்பெருமக்கள்குழுமி இறைவனைத்தரிசித்து பரவசமாவார் கள். எல்லாப் பிரஜைகளும் ஈஸ்வரனருளினால் முகப்பொலிவான தோற்றத்துடன் செல்வீகம் பெருக்கி க்ஷேமமாக வாழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் தேவைக்கேற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகள் சௌகரிய மேன்மையில் இருந்து வருவார்கள். இயந்திர வாகனங்களில் பரிவருத்தனை அல்லது மாறுதல் ஆகும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் ஸ்லாக்கிய பலன் ஏற்படும். விவாத வழக்கில் இருந்த ஓர் பொருள் கைவசமாகும். தாரம் புத்திரர் இவர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மார்கழி மீ 2, 3, 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

**2, ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½**

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். எழுத்துமூலகாரியங்களில் 10உ ஆனால் பிரயோசனம் மிகும். வீடுவாகனங்களின் சௌகரியம் மேலாக இருந்துவரும். அரசாங்க அலுவல்கள் விரைவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும். தாரசௌக்கியம் புத்திரர் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மார்கழிமீ 4உ 6 நாழிகை 55 வினாடி முதல் 6உ 18 நாழிகை 54 வினாடிவரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் நல்லவிதத்தில் வந்துகொண்டிருக்கும். சகோதரரின் விசுவாசம் ஒத்துழைப்பு பலம்தரும். பெற்றோரின் உடல் நலம் பாதித்து உடன் சௌகரியமாகும். பிரவிருத்திகளில் காலதாமதமாக இருந்த எல்லாக்காரியங்களும் நெருக்கமானசமயத்தில் விரைவுடன் பூர்த்தியடைதலாகும். புத்திர பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மனைவிக்குச் சிரோபாதைநலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். மார்கழி மீ 6உ 18 நாழிகை 54 வினாடி முதல் 8உ 26 நாழிகை 56 வினாடி வரையில் சந்திராஷ்டமம், செவ்வாய் புதன் சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**
**( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )**

கடகராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் கண்யமேலீட்டில் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு இராசாங்க நன்மைகளை ஏற்படுத்தும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலம் ஆகும். புனிதஸ்தலங்கள் சென்று வருதல் தெய்வதரிசனம் செய்தல் ஆகிய புண்ணியபலன் கிட்டும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் வெற்றியுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கும். மார்கழிமீ 8உ 26 நாழிகை 56 விஞடிமுதல் 10உ 32 நாழிகை 57 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼**
**( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )**

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனுக இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். சாஸ்திரஞானவிஷயங்களில் மனம் செல்லும். பூர்வசொத்து பிராப்தியில் ஓர் நற்பலன் வரும். கடமையை வற்புறுத்துவதினுல் உடன்பழகுவோர் பணியாளர் இவர்களுக்கு வெறுப்பு உண்டாகுதலும் பின்பலன் கண்டு போற்றுதல் நிலைமையும் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் சாதாரணமாக இருந்துவரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனைசெய்ய நலம் தரும். மார்கழிமீ 10உ 32 நாழிகை 57 விஞடி முதல் 12உ 39 நாழிகை 14 விஞடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**
**( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )**

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவுல் சரிசமனுக இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். 10உ முதல் செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இராஜாங்கநன்மைகளை ஏற்படுத்தும். வீடு வாகனங்களில் நவீன அமைப்பு ஏற்படுத்தும். ஓர்புனிதஸ்தலம் சென்று வருதல் ஆகும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கு வந்து பின் சுமுகமாகும். மார்கழிமீ 12உ 39 நாழிகை 14 விஞடி

முதல் 14உ 48 நாழிகை 7 விஞடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் நற்பலனை அளிக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் மூன்றுவிதத்தில் வந்துசேரும். சிவப்பு பச்சைக் கற்கள் பதித்த ஆபரண பிராப்தியையளிக்கும். மாதமுதலில் பெண் மகவு ஒன்று ஏற்படும். தெய்வஸ்தலங்கள் சென்றுவருதல் குருமார் மேலோர் பெரியோர்களிடம் ஆசிபெறுதல் ஆகிய நற்பலன் தரும் தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மார்கழிமீ 14உ 48 நாழிகை 7 விஞடி முதல் 17உ 1 நாழிகை 30 விஞடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.**

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வேண்டிய அளவிற்கு வந்துசேரும். 10உ முதல் வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறையில் நல்லன ஏற்படும். இயந்திர வாகன பிராப்தியையளிக்கும். வெளுமை வஸ்து பிராப்தி ஆபரண பிராப்தி உண்டாகும். ஓர் ஸ்தலயாத்திரை சென்று வருதல் ஆகும். தாரபுத்திரர்களின் செளக்கியம் நன்ருக இருந்து வரும். மார்கழிமீ 17உ 1 நாழிகை 30 விஞடிமுதல் 19உ 20 நாழிகை 46 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்ல பண வருமானங்களை ஏற்படுத்தும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வித்தியா வியாபாராதிகளில் முன் விளம்பரம் முதலியவற்றில் பொருட்செலவாகும். மாதப் பின் பகுதி ஆதாயமடைதல் ஆகும். இயந்திரவாகனங்கள் பழுதாகிச் சீர்படும். தாரபுத்திரர்களின் செளக்கியம் நன்ருக இருந்துவரும். மார்கழிமீ 19உ 20 நாழிகை 46 விஞடிமுதல் 22உ 45 நாழிகை 51 விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½**

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களுக்கு ஏற்ப அடிக்கடி செலவினங்களும் இருந்துவரும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். இராசிக்கு ஓர் விபத்துவந்து தப்பும். வித்தியா வியாபாராதிகளில் சிலாக்கியபலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் நன்ருக இருந்துவரும். மார்கழிமீ 22உ 45 நாழிகை 51 விஞடி முதல் 24உ 14 நாழிகை 46 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்

**11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾**

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் தன வருமானங்கள் நல்லவகையில் வந்துகொண்டிருக்கும். டாம்பீகம் அல்லது நாகரிக சுகானுபவங்களில் இலட்சிய தன்மையில் செலவினங்களையும் ஏற்படுத்தும். பெண் மகவு ஒன்று ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். தனபிராப்தியை யளிக்கும். ஜீவனோபாயத்தில் மேன்மைஸ்திதி ஏற்படும். மார்கழிமீ 24உ 14 நாழிகை 46 விஞடி முதல் 26உ 43 நாழிகை 13 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼- உத்திரட்டாதி - ரேவதி.**

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும் குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் சகோதரிகளின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும் பூமி இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். வித்தியாவியாபாராதி கலைத் துறைகளில் 10உக்கு மேல் நல்லன ஏற்படும். புத்திரர் பௌத்திரர் இவர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். மார்கழிமீ 1, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு ஐப்பசித்திங்கள் 25 ஆம் நாள் (11—11—79) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் திருத்தலைச்சங்காடு அருள்மிகு சௌந்தரநாயகி உடனுகிய அருள்மிகு சங்கருள்நாயகர் ஆலயத்தில் விசேஷ ஆபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டின்போது தலத்திருப்பதிக பாராயணம், திருபுவனம் தேவஸ்தானம் திருமுறைப் பணியாளர் எஸ். தண்டபாணி அவர்களால் செய்யப்பெற்றது.

பின்னர் 10 மணி அளவில் சமய விரிவுரைக் கூட்டம் நடைபெற்றது. புலவர். திரு. வை. சுவாமிநாதன் 'திருஞானசம்பந்தர்' என்ற தலைப்பிலும், பேராசிரியர் வித்துவான் திரு. எம், சிவச்சந்திரன் எம். ஏ, 'தலத்திருப்பதிகம்' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின்
## எட்டாம் ஆண்டுக் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26½ ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் எட்டாம் ஆண்டுக் குருபூஜை விழா, 11—11—79 ஞாயிற்றுக்கிழமை குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினுர்கள். காலையில் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களும், இரவு வழிபாட்டின்போது திருவண்ணுமலை ஆதீனம்

குன்றக்குடி குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) அவர்களும் வழிபாடாற்றியது குறிப்பிடத்தக்கது. காலை மாலை இருவேளைகளிலும் மாயூரம் முதலிய இடங்களிலிருந்து பலர் வந்து வழிபட்டுக் குருவருள் பெற்றனர்.

காலையில் திருமுறைப் பாராயணம், தொடர்ந்து வழிபாட்டிற்குப் பின்னர் முத்திதரும் தலங்கள் என்ற தலைப்பில் பிறக்கமுத்திதரும் திருவாரூர், நினைக்கமுத்திதரும் திருவண்ணாமலை, தரிசிக்கமுத்திதரும் தில்லை, இறக்கமுத்திதரும் காசி என்ற தலைப்புக்களில் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், கல்லூரிப்பேராசிரியர்களும் விரிவுரையாற்றினர். நண்பகல் மாகேசுவரபூஜை சிறப்பாக நடைபெற்றது. மாலையில் தருமையாதீனத் திருக்கோயில்களின் திருமுறைப் பணியாளர்கள் வேளூர் திரு. க. சொக்கலிங்கம், சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தம், திருபுவனம் திரு. எஸ். தண்டபாணி, திரு. எஸ். இராமலிங்கம் ஆகியோர்கள் திருமுறை இசையரங்கு நிகழ்த்தினர்.

இரவு வழிபாட்டின்போது சந்தானாசாரியர்களில் நான்காமவராக விளங்கிய உமாபதி சிவாசாரியார் அருளிய "போற்றிப் பஃறொடை, வினாவெண்பா" என்ற நூல்கள் பதவுரையுடன் விழா மலராக வெளியிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது. அந்நூல்கள் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல்முதலியார் அவர்கள் விளக்கவுரையாற்றினார்கள். தொடர்ந்து தருமையாதீனப் பணிகளில் விஞ்சிநிற்பது சமயப் பணியா? மொழிப்பணியா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. பட்டிமண்டபத்தின் நடுவர் பொறுப்பை குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஏற்று விரிவுரையாற்றி அனைவரையும் மகிழ்வித்தார்கள்.

சமயப்பணியே என்ற தலைப்பில் புலவர். திரு. இரா. செல்வக் கணபதி எம். ஏ., புலவர். திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் வாதிட்டனர். மொழிப்பணியே என்ற தலைப்பில் புலவர். திரு. மு. சிவச்சந்திரன் எம், ஏ., புலவர். திருமதி. ப. நீலா எம். ஏ. ஆகியோர் வாதிட்டனர். தருமையாதீனப் பணிகளில் விஞ்சி நிற்பது மொழிப்பணியே என்று நடுவர் அவர்கள் தீர்ப்புரை வழங்கினார்கள். இறைவாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

**ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளையின் சார்பில் ;**

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப்பேறெய்திய ஸ்ரீகாசி குமாரசாமி மடத்தில் குருமணியின் திருவுருவப் படத்திற்குச் சிறப்பு வழிபாடும்,

ஸ்ரீ விசாலாட்சியம்மை உடனுகிய ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ கேதாரநாதர் ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் மாகேசுவரபூஜையும் சாதுக்களுக்குப் பண்டாராவும் சிறப்புற நடைபெற்றன. பலரும் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

அன்று மாலை 7 மணியளவில் ஏ. வி. சி. புதிய திருமண மண்டபத்தில் மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத்தினரால் குருபூஜை நினைவு விழா கொண்டாடப்பெற்றது. குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் "சமயத்துறையில் புதிய சிந்தனைகள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றி அனைவரையும் மகிழ்வித்தார்கள். மாயூரம் அன்பர்கள் பலர் வந்திருந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

## திருநள்ளாற்றில் சனிப்பெயர்ச்சிவிழா

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி திருக்கோயிலில் 29—11—79 சனிப்பெயர்ச்சிவிழா அன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருநள்ளாற்றிற்கு எழுந்தருளி அங்கு குடிமக்களுக்கு எண்ணெய் முழுக்காட எண்ணெ வழங்கி நண்பகல் எள்ளன்னமும் வழங்கச் செய்தருளினுர்கள். அன்று நண்பகல் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கும் சனிபகவானுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினுர்கள். மேலும் அன்று இரவு சனிபகவான் சிம்ம ராசியிலிருந்து கன்னியா ராசிக்குச் செல்லும்காலத்தில் சுவாமி அம்பாளையும் சனிபகவானையும் தரிசித்து அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கி ஆசியருளினுர்கள். பாண்டிச்சேரி வானெலியில் சனிப்பெயர்ச்சிவிழா நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப்பெற்றன. செந்தமிழ்ச்செல்வர், திரு. கி. வா. ஜெகந்நாதன் அவர்களும் புலவர். திரு. கீரன் அவர்களும் நேர்முக வருணனை செய்தார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சனிபகவான்சிறப்புப்பற்றி ஆசியருளினுர்கள். தொடர்ந்து காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் ஆசியருளினுர்கள்.

திருநள்ளாற்றில் பாண்டிச்சேரி அரசு தலைமைச் செயலர் அவர்களும் அறநிலையத்துறை ஆணையர் அவர்களும் காரைக்கால் பெருமக்களும் வெளியூர் பெருமக்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து ஆசிபெற்றுர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயில் அலுவலர் முதலிய பலருக்கும் புத்தாடைகள் வழங்கி ஆசியருளினுர்கள்.

## கார்த்திகை ஞாயிறு தீர்த்த விழா

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன் பேட்டை அருள்மிகு ஆனந்தவல்லி உடனுகிய அருள்மிகு சக்திபுரீ சுவரசுவாமி, கார்த்திகைஞாயிறுதோறும் அம்மையுடன் தருமபுரத் தின் காவிரி வடபால் எழுந்தருளித் தீர்த்தங்கொடுத்தருளினுர். மாயூரத்தைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு தீர்த்தநீராடி இறையருள் பெற்றனர்.

## அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி

**வேளூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

மாகடல் சூழ்கின்ற திருமறைக் காடுறை
மணவாள னமணந்த
மங்கையா ழைப்பழித்த மொழி யம்மையே
மகிழகத் தியான்பள்ளியே
நாகமணி பரமன்பா கம்பிரியா நாயகி
நற்கோடிக் குழகர்கோயில்
நாடிடும் மையார் தடங்கண் ணி யம்மையே
நம்பனமர் கோணமலையே
ஆகம வடிவாகி அமருமா துமையம்மை
அய்யனுறை கேதீச்சுரம்
அபயந் தருங்கௌரி யம்பிகை ஆலவாய்
அரசாளு மீனுட்சியே
பாகாக உருகுநெஞ் சர்க்கருள் பாவையே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (24)

உ

சிவமயம்

# "ஞானசம்பந்தம்"

## முப்பத்தெட்டாம் ஆண்டு மலர்ப்பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 1 | அபிடேகப் பலன்கள் | 111 |
| 2 | அமெரிக்காவில் சைவ சித்தாந்தம் | 216 |
| 3 | அரசாணையால் ஆலயங்களின் பூஜைகளை மறந்துவிட வேண்டியதுதான் | 155 |
| 4 | அருள்நந்திசிவத்தின் அருளியல் உள்ளம் | 320 |
| 5 | அறங்கூறும் அரிய நூல்கள் | 82, 177, 221, 289, 336 |
| 6 | அறநிலையங்கள் நலம் காக்க அரசுக்கு வேண்டுகோள் | 193 |
| 7 | அன்னை அருள்மாலை | 28, 60, 112, 208, 288, 350, 365 |
| 8 | ஆலய ஊழியர்களைக் காப்பாற்றியே தீருவோம் | 61 |
| 9 | இறைவா ! உன் ஆலயத்தில் | 77 |
| 10 | உணர்ச்சிக் காவியம் பெரிய புராணம் | 480 |
| 11 | உண்மைகள் உலவுகின்றன | 284 |
| 12 | உயிர் | 247, 273 |
| 13 | எடுத்துச் சுமப்பான் | 244 |
| 14 | எதிர் காலம் | 44. 92, 140, 188, 233, 257, 304, 351, 400. 448, 436, 542 |
| 15 | ஒரு கடமை காமத்தை வெல்கிறது | 180 |
| 16 | கடவுளை எதிர்த்த எந்த ஆட்சியும் நீடிப்பதில்லை | 109 |
| 17 | கடிதம் | 108, 415. 457 |
| 18 | கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் | 37 |

| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 19 | கும்பகோணத் தலச்சிறப்புக்கள் | 113 |
| 20 | குழந்தைகள் ஆண்டில் சில சிந்தனைகள் | 49 |
| 21 | சித்திரஞானபாதம் | 532 |
| 22 | சிவஞான சித்தியார் தெளிபொருள் விளக்கம் | 32, 59 |
| 23 | சிவத்துரோகம் | 487 |
| 24 | சிறு நிலச்சுவான்கள்வர்க்கமே அழிந்துவிடும் | 158 |
| 25 | சிவமூர்த்தங்கள் | 62 |
| 26 | சுதந்திரத்திருநாள் சிந்தனை | 357 |
| 27 | செய்திகள் | 43, 87, 137, 185, 229, 255, 301, 348, 395, 442, 490, 537. |
| 28 | சேக்கிழார் விளக்கும் தத்துவச்செந்நெறி | 384 |
| 29 | சைவத்தின் முதல் ஆசாரியர் | 261 |
| 30 | ஞானக்கண் பெற்றோர் நல்லுரை | 344 |
| 31 | ஞானசம்பந்தம் புத்தாண்டு வாழ்த்து | 16 |
| 32 | ஞானசம்பந்தம் முப்பத்தேழாவது ஆண்டுமலர்ப் பொருளடக்கம் (மலர் 38 — இதழ் 1) | i |
| 33 | தஞ்சை மாவட்டத்தின் சிறப்பு | 293 |
| 34 | தருமைக்கு வாருங்கள் | 241 |
| 35 | தருமையில் தெய்வத் தமிழ் முழக்கம் | 269, 332 |
| 36 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை | 54, 101, 150, 167, 202, 264, 315, 361, 409, 458, 505 |
| 37 | தலைச்சங்காடு, திருவலம்புரம் தலச்சிறப்புக்கள் | 511 |
| 38 | தவராசர் குமர குருபரர் | 436 |
| 39 | திருக்கடவூரில் இரண்டு திருவிளையாடல்கள் | 515 |
| 40 | திருச்சத்தி முற்றம், திருப்பட்டீச்சரம் தலச்சிறப்புக்கள் | 17 |
| 41 | திருஞான சம்பந்தரின் இயற்பெயர் யாது ? | 464 |
| 42 | திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ், திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் (இதழ் 6) | க |

| எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 43 | திருத்துருத்தி, திருவழுந்தூர்த் தலச் சிறப்புக்கள் | 373 |
| 44 | திருதென்குரங்காடுதுறை, திருநீலக்குடித்தலச்சிறப்புக்கள் | 209 |
| 45 | திருநல்லம், திருக்கோழம்பத் தலச்சிறப்புக்கள் | 277 |
| 46 | திருப்பழையாறை வடதளி, திருவலஞ்சுழி தலச்சிறப்புக்கள் | 65 |
| 47 | திருப்பறியலூர், திருச்செம்பொன்பள்ளி தலச்சிறப்புக்கள் | 469 |
| 48 | திருமந்திரமும் சிவஞான சித்தியாரும் | 129, 171 |
| 49 | திருமயிலாடுதுறை, திருவிளநகர்த் தலச்சிறப்புக்கள் | 421 |
| 50 | திருவருட்பாவில் சைவ சித்தாந்தம் | 224 |
| 51 | திருவாவடுதுறைத் தலச்சிறப்புக்கள் | 325 |
| 52 | திருவிடைமருதூர்த் தலச்சிறப்புக்கள் | 161 |
| 53 | திருவைகல் மாடக்கோயில் தலச்சிறப்புக்கள் | 151 |
| 54 | திருவையாற்று தர்மசம்வர்த்தனி மாலை | 239, 296, 340, 391 |
| 55 | தீபாவளித் திருநாள் சிந்தனை | 453 |
| 56 | தெரிந்து கொள்ளுங்கள் | 58, 135 |
| 57 | தொகைப்பாட்டு | 366, 431 |
| 58 | நமது குலதெய்வம் | 309 |
| 59 | நவராத்திரிப் பெருவிழா | 405 |
| 60 | நால்வர் தமிழின் நலன் | 477 |
| 61 | நூற்றுண்டும் கால்நூற்றுண்டும் | 1 |
| 62 | பக்திநெறி | 29 |
| 63 | பார்வையாளர் குறிப்பு நகல் | 126, 128, 179, 187. 201, 246, 468, 548 |
| 64 | புனித நீராட்டு | 501 |
| 65 | மகாசிவராத்திரி | 97 |
| 66 | மதிப்புரை | 136, 356, 390, 500 |
| 67 | மார்கழி மாதச் சிறப்பு நாட்கள் | 160 |

| எண். | தலைப்பு | பக்க எண். |
| --- | --- | --- |
| 68 | மூலன் மரபில்வரு மௌன குரு | 379 |
| 69 | வாழ்ந்திடுவீர் | 127 |
| 70 | வெள்ளத்தால் பாழான வேட்டுவக் கவுண்டர் கோயில் | 123 |
| 71 | ஸ்ரீ இராஜாஜி அவர்கள் தொடக்கப் பேருரை | 7 |
| 72 | ஸ்ரீ இராஜாஜி அவர்கள் நிகழ்த்திய அறவுரை | 12 |
| 73 | 25 : 75 விகிதம் நிலச்சுவான்களுக்கு மட்டுந்தானா? | 159 |
| 74 | "40" ஐ "25" ஆக்கும் கொடுமை | 145 |

உ

சிவமயம்

# மார்கழிமாதச் சிறப்பு நாட்கள்

16—12—79 ஞாயிறு, தனுர்மாத பூஜை ஆரம்பம், ஷடசீதிபுண்ணிய காலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். பிரதோஷம். தனுர்ரவி 15-36.

17—12—79 திங்கள், மாத சிவராத்திரி.

18—12—79 செவ்வாய், கிருஷ்ணங்காரக சதுர்த்தசி. போதாயன அமாவாசை.

19—12—79 புதன். அமாவாசை, அனுமத் ஜயந்தி.

20—12—79 வியாழன், சாக்கிய நாயனர் குருபூஜை.

24—12—79 திங்கள், சிதம்பரம் உத்தரகோசமங்கை முதலிய தலங்களில் திருவெம்பாவை உற்சவாரம்பம். சீகாழி திருவையாறு ஊஞ்சல் உற்சவாரம்பம்.

26—12—79 புதன், தனுர்வியதீபாதம்.

27—12—79 வியாழன், வாயிலார் நாயனர் குருபூஜை.

28—12—79 வெள்ளி, தருமையாதீனம் 11 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

29—12—79 சனி. வைகுண்ட ஏகாதசி. கர்ப்போட்டாரம்பம் 18-23.

30—12—79 ஞாயிறு, வேளூர், தருமை சண்முகர் கிருத்திகைஅபிஷேகம். பிரதோஷம். கிருத்திகை விரதம்.

1— 1—80 செவ்வாய், பௌர்ணமி விரதபூஜை. பின்னிரவு நடராசர் அபிஷேகம்.

2— 1—80 புதன், ஆருத்திரா தரிசனம், சீகாழியில் உமாமகேசருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு மாதபூஜையில் நெய் அபிஷேகம். சடைய நாயனர் குருபூஜை.

5— 1—80 சனி, தருமபுரம் 2 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜை.

7— 1—80 திங்கள், திருவையாறு ஸ்ரீதியாகராஜசுவாமிகள் 133ஆவது ஆராதனை.

8— 1—80 செவ்வாய், திருக்கடவூர் முனீஸ்வர பூஜை. இயற்பகை நாயனர் குருபூஜை.

10— 1—80 வியாழன், காளாஷ்டமி.

11— 1—80 வெள்ளி. கூடாரைவெல்லி. கர்ப்போட்ட நிவர்த்தி 20-47. மானக்கஞ்சாற நாயனர் குருபூஜை.

14— 1—80 திங்கள். போகிப்பண்டிகை மகரரவி 36-29.

GNANASAMBANDAM Regd. No. Tn/NM2

உ

சிவமயம்

தருமையாதீனத்தில்

இரண்டாவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

# குருபூஜை விழா

தருமை ஆதீனத்தை நிறுவிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தம்மாணாக்கர் ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகருக்கு ஞானோபதேசம்செய்து ஞானபீடத்தில் அமர்த்தி ஜீவசமாதி நிலைக்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர் அதிதீவிர பக்குவராதலால் உபதேசம்பெற்ற அப்பொழுதே, தம் ஆசாரியரின் அருள் நிலையத்தைத் தரிசித்தவண்ணமே மேற்றிசையில் அமர்ந்து சமாதி கூடினார்கள். அடியார்கள் வேண்டுகோளுக்கிணங்க ஜீவசமாதியிலிருந்த குருஞானசம்பந்ததேசிக சுவாமிகள் மீண்டும் எழுந்தருளிவந்து, அடுத்த மாணாக்கராகிய ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்கு ஞானோபதேசம் செய்தருளி ஞானபீடத்திலமர்த்தி, சமாதி கூடினார்கள்.

இவ்வண்ணம் ஞானானுபூதிமானாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழா 5—1—1980 சனிக்கிழமை தருமபுரம் மேல வீதியின் மேல்பால் அமைந்துள்ள குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெறும். காலை மாலை சமயச்சொற்பொழிவுகளும், திருமுறைப்பாராயணமும் நிகழும். அன்பர்கள் தரிசித்து குருவருள் பெற்று உய்வார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram
at the Gnanasambandam Press. Dharmapuram Mayuram 10 - 12 - 79